பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 06 சனிக்கிழமை (21-06-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:706

# தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதம் வழங்க அரசிடம் கோருகிறது பொ.ஐ.முன்னணி!

## அதன் பேச்சாளர் சரத் அமுனுகம தகவல்

கொழும்பு,ஜூன்21

**தமிழ்க் குழுக்களின் உறுப்பினர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்க முடியாவிட்டால் அந்த இயக்கங்களுக்கு ஆயுதங்களை அரசு திரும்ப வழங்க வேண்டும்.**

**பிரதான எதிர்க்கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மேற்கண்டவாறு அரசிடம் கோரியுள்ளது.**

ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் அணியின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தகுபத்திரன் கடந்த வாரம் படுகொலை செய்யப்பட்டார். அதனை அடுத்து ஜனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் விடுத்த அறிக்கை ஒன்றில், தமிழ்க் குழுக்களுக்கு ஆயுதங்களைத் திருப்பிக்கொடுக்க வேண்டும் என ஜனாதிபதி கருதுவதாகத் தெரிவித்திருந்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பேச்சாளர் சரத் அமுனுகமவும் இது குறித்து நேற்று கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவித்துள்ளதாவது:-

மாற்று இயக்கங்களின் உறுப்பினர்கள் கொல்லப்படுவது புரிந்துணர்வு

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சபையில் நேற்றும் சலசலப்பு; ஐயரத்ன எம்.பி.வெளியேற்றம்!

நாடாளுமன்றத்தில் பிரேதப் பெட்டி விவகாரம் நேற்றும் சலசலப்பை ஏற்படுத்தியது. சபையின் வழமையான அலுவல்களை அடுத்து நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் உறுப்பினர்களின் சிறப்புரிமை குறித்து ஓர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியதை அடுத்தே இச்சலசலப்பு உண்டானது.

சபைக்குள் பிரேதப்பெட்டியைக் கொண்டு வந்த எதிர்க் கட்சியினர் அப்பெட்டிக்குள் கூர்மையான ஆயுதங்களையும் வைத்து எடுத்து வந்திருக்கின்றனர். இச்செயலுடன் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அமைச்சர் அஸ்வர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

அச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரோ அப்பொழுது உறுதியளித்தார்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

'பொங்குதமிழ்' இடம்பெறும் நாளன்று

## பாதுகாப்பு அமைச்சின் ஆதரவில் 2500 பௌத்தர்கள் வருகின்றனர்

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்பல்கலைக்கழகத்தில் 'பொங்கு தமிழ்' நிகழ்வு இடம் பெறும் எதிர்வரும் 27ஆம் திகதியன்று தெற்கிலிருந்து 2ஆயிரத்து 500பௌத்தர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளனர்.

கண்டி வீதிவழியாக 50இற்கும் மேற்பட்ட வாகனங்களில் வரும் இவர்கள் நயினாதீவுக்குச் சென்று அங்கு சமாதானப் பிரார்த்தனையில் ஈடுபடுவர்.

29ஆம் திகதி இரவு சமாதானத்தை வலியுறுத்தி பஞ்சசீலப்பூசை ஒன்றை அவர்கள் நயினாதீவில் நடத்தவிருக்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுசரணையுடன் வரும் இவர்கள், நயினாதீவு ஆஸ்பத்திரிக்கும் பொதுமக்களுக்கும் உதவிப்பொருள்களை வழங்குவர். (ஒ-3)

## கொழும்பில் அமெரிக்கப் போர்க் கப்பல்; தாக்குதலுக்குத் தயாராவதே நோக்கம்!

அமெரிக்காவின் ஏவுகணை நாசகாரி கப்பல்களில் ஒன்றான ஓகானே (டிடிஜி.77) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருக்கிறது. இந்தக் கடற்படைக் கப்பலில் சுமார் 350 வீரர்கள் இருக்கின்றனர். கடலில் விரைவான, தொடர்ச்சியான தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராவதே இப் போர்க் கப்பலின் வருகையின் நோக்கமாகும்.

இக்கப்பலின் வருகையை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் நேற்று அறிவித்தது. 1999 ஆம் ஆண்டு சேவைக்கு விடப்பட்ட இப் போர்க் கப்பல் ஹவாய் பேர்ள் துறைமுகத்தைத் தளமாகக் கொண்டிருக்கிறது. கடற்படை கமாண்டர் மைக்கல் எஸ். விலண்ட் அதன் கட்டளைத் தளபதியாக இருக்கிறார்.

இரண்டாம் உலகப் போரின் புகழ் பெற்ற ஒரு நாயகனான ரியர் அட்மிரல் ரிச்சார்ட் எச்.ஓ.கானாவின் பெயரே இக்கப்பலுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது.

கொழும்பில் தங்கியிருக்கையில், கப்பலின் கமாண்டர் இலங்கைக் கடற்படையின் அதிகாரிகளைச் சந்திப்பார். வீரர்களும் கொழும்பைச் சுற்றிப் பார்வையிடுவர்.

-இவ்வாறு தூதரக அறிக்கை தெரிவித்திருக்கிறது. (ஒ-4)

### மட்டுநகர்ப் பகுதியில் தமிழர் மீள்குடியமர ஊர்காவல்படை தடை!

மட்டக்களப்பு,ஜூன்21

மட்டக்களப்பு மாவட்டம் ஒலிவியாமடு கிராமத்தில் மீளக்குடியமரச் சென்ற தமிழ்மக்கள் சிங்கள இளைஞர்களாலும் ஊர்காவல் படையினராலும் திருப்பி அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது.

1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற படைநடவடிக்கையினால் இப்பகுதியிலிருந்து தமிழ்க்குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. தற்போதைய சமாதான சூழலைத்தொடர்ந்து தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர அக்குடும்பங்கள் சென்ற போதே திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அந்த மக்கள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

தலைமை குறித்த சர்ச்சையின் மத்தியில்

## கூட்டணியின் மத்தியகுழு ஜூலை 6 கொழும்பில் கூடும்

கொழும்பு,ஜூன்21

தமிழர் விடுதலைக் கூட்டணியின தலைமை குறித்த சர்ச்சையினால் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் மத்தியில் கூட்டணியின் மத்திய குழு அடுதத மாதம் 6ஆம் திகதி கொழும்பில் கூடவிருக்கின்றது.

கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து விலகுமாறு கூட்டணி உறுப்பினர்கள் வீ ஆனந்தசங்கரியை நேரடியாகக் கோரியதும் -

தலைவர் பதவியில் இருந்து தாம விலகப்போவதில்லை என ஆனந்தசங்கரி அறிவித்திருந்ததும் - அரசியல் வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்த நெருக்கடி நிலையிலேயே கூட்டணியின் மத்தியகுழு அடுத்த மாதம் 6ஆம் திகதி கூடவிருக்கின்றது.

எதிர்காலச் செயற்பாடுகள் குறித்தும், கூட்டணியை எவ்வாறு புனரமைப்பது என்பது குறித்தும் இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்படும் என்று கூட்டணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (ஒ-3)

## அரச ஊழியர் சம்பளத்தை 50 வீதத்தால் அதிகரிக்குக!

### அமைச்சரவைக்கு ஜனாதிபதி ஆலோசனை

கொழும்பு,ஜூன்21

அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உடனடியாக 50 சதவீதத்தால் அதிகரிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அமைச்சரவைக்கு ஆலோசனை கூறியுள்ளார்.

நிதி நெருக்கடி காரணமாக சம்பள ஆணைக்குழுவின் சிபார்சுகளை அரசாங்கத்தால் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்பதைத் தாம் ஏற்றுக்கொள்வதாகவும் -

எனினும், அண்மையில் கிடைக்கப்பெற்ற நிதி உதவி காரணமாக நிதி நிலைமை சீரடைந்துள்ளதால் சம்பள அதிகரிப்பை ஓரளவுக்கு நடைமுறைப்படுத்தமுடியும் என்றும் - ஜனாதிபதி தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டுக்கான சம்பள ஆணைக்குழுவின் அறிக்கையினையும் அதன் சிபார்சுகளையும் வெளியிடுமாறும் ஜனாதிபதி கேட்டுள்ளார்.

தகுந்த திருத்தங்களுடன் இந்த சிபார்சுகள் தாமதமின்றி நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து ஜனாதிபதி அமைச்சரவைக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். (ஒ-4)

## உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஜன.24இற்கு பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூன்21

வடக்கு-கிழக்கு உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அடுத்தவருடம் ஜனவரி மாதம் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். பிரந்த தேர்தல் ஆணையாளர் அறிவித்தின்ளார்.

தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை தற்சமயம் இல்லாததால் தேர்தலை பிற்போடும்படி பிரதமரிடம் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதே சமயம், தேர்தல் ஆணையாளரைச் சந்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கப்பல் மூழ்கடிப்பு குறித்து அறிக்கை வெளியிடுவதில் தாமதம்!

கொழும்பு,ஜூன்21

முல்லைத்தீவு கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக முரண்பாடான தகவல்களே கிடைத்துள்ளன. இதனால் இச்சம்பவம் குறித்த இறுதி அறிக்கையை வெளியிடுவது தாமதமாகும்.

- இவ்வாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கடற்படை, பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி, விடுதலைப் புலிகள் ஆகிய தரப்புக்கள் முரண்பாடான தகவல்களைத் தந்துள்ளன. இந்தத் தகவல்களை வைத்து இறுதி அறிக்கை வெளியிடுவது என்பது, உடன் சாத்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் பிரதிநிதித்துவம் கோரும் ஜனாதிபதியின் கடிதத்துக்கு என்ன பதில்?

### பிரதமரிடம் மஹிந்த ராஜபக்ஷ கேள்வி

கொழும்பு,ஜூன்21

சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் பிரதிநிதி மற்றும் வடக்கு, கிழக்கைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளடக்கப்பட வேண்டும் என்று கோரி ஜனாதிபதி அனுப்பிய கடிதத்துக்குப் பிரதமர் இன்னும் பதிலளிக்காதது ஏன்? - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ. அவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்திலேயே இவ்வாறு கேட்டிருக்கிறார்.

டோக்கியோ உதவும் நாடுகளின் மாநாட்டில் பிரதமர் ஆற்றிய உரை இலங்கையின் வெளிநாட்டு நண்பர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்லும் வகையில் அமைந்திருந்ததாகவும் -

கடந்த பொதுத் தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்முறைகள், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான அடக்கு முறைகள் ஆகியவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஐ.தே.க. அரசு தவறிவிட்டது என்றும் - அவர் குற்றஞ்சாட்டினார்.

இந்த விடயங்கள் திருத்தி அமைக்கப்படவேண்டும் என்றும் - எதிர்க்கட்சித் தலைவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ளடக்கப்படவேண்டும் என்று பிரதமர் தெரிவித்த கருத்தை வரவேற்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர், முஸ்லிம் பிரதிநிதிகள உள்ளடக்கப்படாதமை சமாதானப் பேச்சுக்களில் ஒரு குறைபாடாகவே காணப்படுகிறது என்று தெரிவித்திருக்கிறார்.

சமாதான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதியுடன் தாம் விரிவான ஆலோசனை நடத்தவிருப்பதாகப் பிரதமர் தெரிவித்த கருத்து ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகவும் -

### கடற்படையினர் மீது மாரப்பன குற்றச்சாட்டு!

கொழும்பு, ஜூன்21

அண்மையில் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகத் தனக்கு கடற்படையினர் உடனடியாகத் தெரியப்படுத்தவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன குற்றஞ்சாட்டியுள்ளார்.

நள்ளிரவு வேளை நடைபெற்ற இச் சம்பவம் தொடர்பாக மறுநாள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கினாலே எமது பிரச்சினை தீரும்!

## இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் மகஜர்

வலி.வடக்கு,ஜூன்21

விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகத்தை வழங்கினாலே இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் அவல வாழ்வு வாழ்வோரின் பிரச்சினைகள்தீரும்.

இலங்கை மனித உரிமை ஆணைககுழுவின பிரதிகளிடம் கையளித்த மகஜரில் யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் குறிப்பிட்டுள்ளது.

வலிகாமம் வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் குறைகளை நேரில் கண்டறியும் பணிகளில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நேற்று ஈடுபட்டனர். இப்பிரதிநிதிகள் நேற்று மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை முகாம், கந்தரோடை முகாம், சங்கானை வள்மதி முகாம் ஆகியவற்றுக்குச் சென்று அங்கு தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுடன் கலந்துரையாடினர். அவ்வேளையில், இக்குழுவினிடம் யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசம் மகஜர் ஒன்றைக் கையளித்தது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.மாவட்டத்திற்கு விஜயம் செய்த அமைச்சர்கள் பல வாக்குறுதிகளை அள்ளி வீசிச் சென்றுள்ளார்கள். பல உயர் அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பல உறுதி மொழிகளைக் கூறிச்சென்றுள்ளார்கள். ஆனால அவையெல்லாம் பட்டமரத்தில் பால் வடிந்த கதையாகவே உள்ளன.

இத்தகைய ஏமாற்றங்களுக்கும் ஏமாற்றுதல்களுக்கும் மீண்டும் உட்பட விரும்பவில்லை. எமக்கு பாய்களோ அன்றி பிளாஸ்ரிக் கோப்பைகளோ வேண்டியதில்லை. எங்களுடைய நலன்புரி நிலையங்களுக்கு எந்தவோர் அரச சார்பற்ற நிறுவனங்களும் வரவேண்டிய தேவையில்லை.

எமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமர்வதை மட்டுமே நாம் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்கின்றோம். இதனை எங்களுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னின்று நிறைவேற்றித் தரவேண்டும் - என்றுளளது. (ஒ-86)

# ஏக்கலை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 204 பேர் திடீர் மயக்கம்!

கொழும்பு,ஜூன்21

ஜா-எலை, ஏக்கலையிலுள்ள ஒரு ஆடைத் தொழிற்சாலையின் 200 இற்கு மேற்பட்ட ஊழியர்கள் நேற்று திடீரென மயக்கமடைந்தனர். அவர்கள் உடனடியாக ராகமை, கம்பஹா ஆகிய வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர்.

நுளம்புக் கொல்லி நாசினி தெளிக்கப்பட்ட பின்னர் காற்றைச் சுவாசித்தவர்களே இவ்வாறு நோய்வாய்ப்பட்டிருக்கின்றனர்.

கம்பஹா வைத்தியசாலையில் 48 ஊழியர்கள் சேர்க்கப்பட்டனர். அவர்கள் அனைவரும் ஆபத்தான நிலையில் இருக்கின்றனர் என அறிவிக்கப்பட்டது. 156 ஊழியர்கள் ராகமை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மருத்துவர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தம் காரணமாக இந்த ஊழியர்களுக்கு சிகிச்சையளிப்பதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

வழமையாக உபயோகிக்கும் நுளம்புக் கொல்லி நாசினியையே விசிறியதாகவும், தொழிற்சாலை குளிரூட்டப்பட்டது என்பதால் அதன் நச்சுத்தன்மை தீவிரமடைந்திருக்கலாம் எனவும் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தெரிவித்திருக்கின்றனர்.

# காரைநகர் பிரதேச செயலகத்துக்கு வலந்தலையில் புதிய கட்டடம்

காரைநகர்,ஜூன்21

காரைநகர் பிரதேச செயலகத்திற்கு சிறந்த கட்டடம் அமைப்பதற்கென காரைநகர் வலந்தலைப் பகுதியில் காணி தெரிவுசெய்யப்பட்டு அதனை துப்பரவு செய்யும் பணிகள் ஆரம்பிககப்பட்டுள்ளன.

சுமார் பத்து ஏக்கர் பரப்பளவுடைய காணியே இவ்வாறு புல்டோசர் மூலம் துப்புரவு செய்யப்படுகிறது.

இக்காணியில் மேலும் பல திணைக்களங்களுக்கான நிரந்தரக் கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது.

அடுத்த மாத முற்பகுதியில் இப பிரதேச செயலக கட்டடத்திற்கான அடிக்கல் நடப்படவுள்ளது.

தற்போது மேற்படி பிரதேச செயலகம் காரைநகர் வேம்படியில் உள்ள தற்காலிக கட்டடம் ஒன்றில் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (எ-73)

# ஆயுள் காப்புறுதி பெறுவதில் குடாநாட்டு மக்கள் ஆர்வம்!

## 'யூனியன் அஷ்யூரன்ஸ்' பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்21

குடாநாட்டில் ஆயுள் காப்புறுதி செய்வதில் மக்கள் ஆர்வமாக இருக்கின்றனர். எமது நிறுவனம் திட்டமிட்டதைவிட அதிகமானோர் காப்புறுதி செய்துள்ளனர் என்று யூனியன் அஷ்யூரன்ஸ் பணிப்பாளர் ஹைடெரி ஏ.ரெஹமஞ்சி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள அவர் உதயன் அலுவலகத்துக்கு நேற்று வந்த சமயம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் யாழ்.கிளையின் செயற்பாடுகள் குறித்து அவர் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் முதலாவது காப்புறுதிக் கிளையை எமது அமைப்பு கடந்த வருடம் மே மாதம் ஆரம்பித்திருந்தது. யாழ்.நகரில் வாடிக்கையாளரின் எண்ணிக்கை குறித்து ஓர் இலக்கு வைத்திருந்தோம். ஆனால், எமது இலக்கை விட கூடுதலானவர்கள் காப்புறுதி செய்துள்ளனர். இந்த வருட இலக்கில் இப்போதே 90 சதவீதம் பூர்த்தியாகிவிட்டது.



பொதுக் காப்புறுதித் திட்டத்திலும் வர்த்தகர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். எமது தலைமையகத்துக்கும் யாழ்.அலுவலகத்துக்கும் இடையில் உடனுக்குடன் தகவல்களைப் பரிமாற கணனி மயப்படுத்தியுள்ளோம். இதனால், எந்த விவரத்தையும் யாழ்.அலுவலகம் கொழும்பில் இருந்து உடனுக்குடன் பெற வாய்ப்புக் கிட்டியுள்ளது.

எமது நிறுவனத்தில் பணிபுரிபவர்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கி வருகின்றோம். அவர்களுக்கு கொழும்பிலும் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

'சஸ்கிறிமக' என்ற புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம். இத்திட்டத்தில் ஆயுள் காப்புறுதியும் முதலீட்டு வசதியும் இணைக்கப்பட்டுள்ளன. இது பல நன்மைகளைக் கொண்டது - என்றார் அவர். (ஓ-3)

# நாளை முழுநாளும் நிட்டம்புவையில் சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு

## காலையில் பண்டாரநாயக்க சமாதியில் மலரஞ்சலி

கொழும்பு,ஜூன்21

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 14 ஆவது தேசிய மாநாடு நாளை நிட்டம்புவ ஸ்ரீசங்கபோதி வித்தியாலயத்தில் நடைபெறும். கட்சித் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மாநாட்டுக்கு தலைமை வகிப்பார்.

மாநாட்டுக்கு முன்னர் காலை 9.30 மணிக்கு ஜனாதிபதியும் கட்சியின் ஏனைய தலைவர்களும் ஹொரகொல்லை பண்டாரநாயக்க சமாதியில் மலரஞ்சலி செலுத்துவர். காலை 10.30 மணிக்கு செயற்குழுக் கூட்டம் சங்கபோதி வித்தியாலயத்தில் ஆரம்பமாகும். பின்னர் நிர்வாகசபைக் கூட்டம் நடைபெறும்.

பிற்பகல் 2மணிக்கு மாநாடு ஆரம்பமாகும். மாநாட்டில் கட்சியின் புதிய கொள்கைப்பிரகடனம் வெளியிடப்பட இருப்பதாகவும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சில தீர்மானங்கள மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் கட்சியின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

இதற்கிடையே, கட்சியின் நிட்டம்புவ மாநாட்டில் பங்குபற்ற உடதலவின்ன படுகொலைகள் வழக்கின் முதலாவது பிரதிவாதியும்,கண்டி மாவட்ட பொ.ஐ.மு.எம்.பியுமான அனுருத்த ரத்வத்தவுக்கு மேல்நீதி மன்றம் அனுமதி வழங்கியிருக்கிறது.

# போக்குவரத்துச் சபையின் ஊழியர் தெரிவில் முறைகேடு

## அடைக்கலநாதன்.எம்.பி. தெரிவிப்பு

வவுனியா,ஜூன்21

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலைக்கு ஊழியர்கள தெரிவு செய்யப்பட்டதில் முறைகேடு நடந்ததாக வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அடைக்கலநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலைக்கு ஊழியர்களைத் தெரிவுசெய்வதற்கென எழுத்துப் பரீட்சையும், நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டது. இந்நிலையில் போக்குவரத்து சபை அதிகாரிகள், அப்பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி எந்தச் சமூகமும் பாதிக்கப்படாத வகையில் விகிதாசார அடிப்படையில் ஊழியர்களைத் தெரிவு செய்வதென முடிவு செய்தனர். ஆனால், இந்த முடிவுக்கு நேர்மாறாக ஒரு சமூகத்திலிருந்து மட்டும் 10 சாரதிகள், 10 நடத்துநர்கள் மற்றும் இயந்திரங்கள் பழுதுபார்ப்போர் 7 பேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களது பட்டியல் மன்னார் சாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. இது மன்னார் மாவட்டத்தில் இதுவரை காலமும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்த சமூகங்களுக்கிடையில் ஒரு குழப்ப நிலையை உருவாக்க சில சுயநல சக்திகளால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும்.

- என்று அவர் தெரிவித்தார். (ஓ)

# நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் வாக்குறுதி

வவுனியா,ஜூன்21

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலைக்கு ஊழியர்களைத் தெரிவுசெய்வதில் இடம்பெற்றதாகக் கூறப்படுவது குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து அமைச்சர் திலக் மாரபன வாக்குறுதி வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாகத் தன்னைச் சந்தித்த வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அ.அடைக்கலநாதன், ராஜகுகனேஸ்வரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரிடமே இந்த வாக்குறுதியை அமைச்சர் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று பிற்பகல் 1230 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்துக்கு வந்திருந்த போக்குவரத்துச் சபைத்தலைவரிடமும், இது குறித்து வவுனியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் முறையிட்டதாகவும் - தற்போது அறிவிக்கப்பட்ட பட்டியலை ரத்துச் செய்து, எந்தச் சமூகமும் பாதிக்கப்படாத வகையில் ஆள்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என போக்குவரத்துச் சபைத் தலைவர் தெரிவித்ததாகவும்-

மேலும் கூறப்படுகிறது. (ஓ)

# களுபோவில, ராகம வைத்தியசாலைகளில் நோயாளர்களைச் சேர்ப்பது நிறுத்தம்!

## மருத்துவ அதிகாரிகள் மற்றொரு நடவடிக்கை

நேற்று நண்பகல்முதல் களுபோவில, ராகம போதனா வைத்தியசாலைகளுக்கு நோயாளர்களைச் சேர்த்துக்கொள்வதை நிறுத்தி வைத்திருப்பதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

சம்பள முரண்பாடு தொடர்பாக சுகாதார அமைச்சு விடுத்த சுற்றறிக்கையின் சட்டபூர்வத்தன்மை குறித்து கேள்வி எழுப்பியிருக்கும் இச்சங்கம், சுகாதார அமைச்சர் மீண்டும் ஒரு முறை தங்களை ஏமாற்றிவிட்டார் என்று குற்றஞ்சாட்டுகிறது.

தமது கோரிக்கைகள் தொடர்பாக விரைவான தீர்வைத் தராவிடின் வெளியிடங்களிலுள்ள பெரிய வைத்தியசாலைகளிலும், ஆதார வைத்தியசாலைகளிலும் உள்ள மருத்துவர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இச்சங்கம் ஆரம்பித்திருக்கும் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

# இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண ஜே.வி.பி. இணக்கம்!

## ஜனாதிபதி சந்திரிகா பேட்டியில் தகவல்

கொழும்பு, ஜூன்21

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலமல்ல, அரசியல் பேச்சுக்கள் மூலமே தீர்வுகாண முடியும் என்ற தனது நிலைப்பாட்டுக்கு ஜே.வி.பி. இணக்கம் தெரிவித்திருக்கிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்.

இளம் ஆசிய கலைஞர்களின் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி இத்தகவலை வெளியிட்டிருக்கிறார்.

அரசியல் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதென்ற தனது நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை எனவும் ஜனாதிபதி பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

"சமாதானப் பேச்சுக்கள் பலவருடங்களுக்கு முன்னர் பொ.ஐ.முன்னணியினாலேயே ஆரம்பிக்கப்பட்டன. இப்பேச்சுக்களை முன்னெடுத்துச்செல்வதற்கு ஐ.தே.முன்னணி அரசு நடவடிக்கை எடுத்துவருவதை இட்டு மகிழ்ச்சி அடைகிறேன். பொ.ஐ.முன்னணி மீண்டும் அரசாங்கத்தை அமைககும் பட்சத்தில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்" எனவும் ஜனாதிபதி பேட்டியில் கூறியிருக்கிறார். (ஒ)

# ஐ.தே.மு. அரசுடனேயே விடுதலைப் புலிகள் பேச்சு!

## புலித்தேவன் தெரிவிப்பு

சமாதான நடைமுறைகளை ஐக்கிய தேசிய முன்னணி அரசுடனேயே மேற்கொள்ள விரும்புகிறோம் என்று புலிகளின் சமாதானச் செயலகத்தின் தலைவரான எஸ்.புலித்தேவன் கூறியிருக்கிறார்.

மருத்துவ சிகிச்சைக்காக கொழும்புக்கு வந்த அவர்,தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் இதைக் கூறியதோடு, பொ.ஐ. முன்னணி நாடாளுமன்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலரைச் சந்தித்ததாகக் கூறப்படுவதை மறுத்தார்.

பொ.ஐ.முன்னணியுடன் எமக்கு எந்த ஒரு 'கொடுக்கல், வாங்கலும் தேவையில்லை என்று எமது அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனும்,அரசியல் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கமும் ஏற்கனவே கூறியிருக்கின்றனர் எனவும் - புலித்தேவன் கூறினார். (ஒ)

# கெரில்லா பாணி தாக்குதல்களில் நாளாந்தம் அமெ. படையினர் பலி!

## வியட்நாமாக மாறுமா ஈராக்?

பக்தாத்,ஜுன்21

ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினர் மீது சதாம் ஆதரவுப் படையினர் கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர். இதனால், அங்கு நாளாந்தம் அமெரிக்கப் படையினர் உயிரிழந்து வருகின்றனர் அல்லது காயமடைகின்றனர்.

வியாழனன்று அமெரிக்க இராணுவ மருத்துவப் பிரிவு மீது கிரனேட் லோஞ்சரால் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒருவர் பலியானார். மேலும் இருவர் காயமடைந்தனர். தாக்குதலில் அம்புலன்ஸ் ஒன்று சேதமடைந்ததாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த சில வாரங்களாக இத்தகைய தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. சட்டவிரோதமாக பொதுமக்கள் மத்தியில் இருக்கும் ஆயுதங்களை அகற்றுவதற்கு அமெரிக்கா ஒரு வார நடவடிக்கை மேற்கொண்ட பின்னரும் இந்தத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

வியாழனன்று நடந்த தாக்குதல் இந்த வாரத்தில் பக்தாத்தில் அமெரிக்கப் படையினர் மீது நடத்தப்பட்ட மூன்றாவது தாக்குதலாகும். இந்த நிலை தொடர்வது குறித்து அமெரிக்க அதிகாரிகள் பலர் எச்சரிக்கை செய்துள்ளனர். ஈராக் மற்றொரு வியட்நாமாக மாறிவிடும் என்றும் அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். (ம)

# சமாதான முயற்சியைத் தொடர பவல் ஜெருசலேமுக்கு விஜயம்

ஜெருசலேம்,ஜுன்21

மத்தியகிழக்கில் தொடரும் வன்முறைகளால் சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தடைகளை நீக்கி அதனை மீண்டும் அதன் தடத்துக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் ஜெருசலேத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் மற்றும் பலஸ்தீனப் பிரதமர் மொஹமட் அப்பாஸ் ஆகியோரை தனித் தனியே சந்தித்து சமாதான முயற்சிகளில் கூறப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அவர் முயல்வார் என்று கூறப்பட்டது.

சமாதான முயற்சிகள் இந்த மாதம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வன்முறைகள் நிறுத்தப்படவேண்டும் என்று சமாதானத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளது. ஆனால், இந்த ஒரு மாதத்தில் இடம்பெற்ற வன்முறைகளில் மட்டும் இரு தரப்பிலும் குறைந்தது 60பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து கொலின் பவலிடம் அவர் ஜோர்டானுக்குச் செல்லும் வழியில் வியாழனன்று செய்தியாளர்கள் கேட்டனர். இந்த வன்முறைச் சம்பவங்களால் சமாதானத் திட்டத்துக்கு பெரும பாதிப்பு ஏதும் ஏற்படாது என்று பவல் தெரிவித்தார்.

இதற்கிடையில் - சமாதானத் திட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி பலஸ்தீன கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் உள்ள குடியிருப்புக்களில் அவர்களின் பாதுகாப்புக்காக நிறுவப்பட்டிருந்த தமது நிலைகளை இஸ்ரேல் அகற்ற ஆரம்பித்துள்ளது. இந்த நடவடிக்கையின் போது, இஸ்ரேலிய இராணுவத்துக்கும் யூதக் குடியிருப்பாளர்களுக்கும் இடையில் கலவரம் ஏற்பட்டது.

தன் பக்கத்தில் பலஸ்தீனப் பிரதமர் அப்பாஸ், இஸ்ரேலின் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு கோரி பலஸ்தீன ஆயுதக் குழுக்களுடன் மேலும் பேச்சுக்களை நடத்தியுள்ளார். (ம)



இந்தியாவின் ஹூக்ளி மாவட்டத்தில் நாய்க்கும் சிறுமிக்கும் திருமணம் என்று வெளியான செய்தியில் தொடர்புடைய சிறுமியையும் அவளைத் திருமணம் செய்து கொண்ட நாயையும் படத்தில் காணலாம். கூடவே சிறுமியின் தகப்பனும்

# ஐரோப்பிய ஒன்றிய மறுசீரமைப்பு; தலைவர்களிடம் கருத்து வேறுபாடு

கிறீஸ்,ஜுன்21

ஐரோப்பிய ஒன்றியத்தில் சில அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவது தொடர்பாக ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் கிறீஸில் கூடி ஆராய்ந்து வருகின்றனர். எனினும் இந்த விடயத்தில் ஒன்றியத்தினுள் பிளவுகள் ஏற்படும் என்று மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னரே தெரிகின்றது.

அகதிகள் தமது நாடுகளுக்குள் நுழைவதைத் தடுப்பதற்காக எல்லை நாடுகளில் அகதி முகாம்களை அமைத்து அவர்களை அங்கேயே தங்க வைக்கும் திட்டம் ஒன்றை பிரிட்டன் முன்வைத்துள்ளது. ஆனால், அந்தத் திட்டத்துக்கு ஒன்றியத்தில் உள்ள வேறு சில நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. அகதிகள் நுழைவதைத் தடுக்கக் கூடாது என்று அவை கருதுகின்றன.

எனினும் இந்த விடயத்தில் பிரிட்டன் தீவிரமாக இருந்து வருகின்றது. மனித உரிமைகள் குழுக்கள் பிரிட்டனின் இந்தக் கொள்கையைக் கடுமையாகச் சாடியுள்ளன. வடகொரியா மற்றும் ஈரான் ஆகியவை அணுவாயுதங்களை உற்பத்தி செய்ய மேற்கொள்ளும் முயற்சிகள் தொடர்பாக எச்சரிக்கை தெரிவிக்கும் விடயத்தில் ஒன்றிய நாடுகள் அனைத்தும் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தியுள்ளன. (ம)



பலஸ்தீனர் ஒருவரை மேற்குக்கரையில் கைதுசெய்யும் படையினர்.

# அமெரிக்க பாலத்தை தகர்க்க சதி முயற்சி!

நியூயோர்க்,ஜுன்21.

அமெரிக்க டிரக் சாரதி ஒருவர் நியூயோர்க்கில் உள்ள பெரிய பாலம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருந்ததாக ஒப்புக்கொண்டுள்ளார் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

இயமன் பரிஸ் (வயது 34) என்ற அந்த டிரக் சாரதி பாலத்தை தகர்ப்பதற்குத் பொருளுதவிகளையும் அல்கெய்டா உறுப்பினர்களுக்கு ஆதரவையும் வழங்கியுள்ளார்.

தன்னுடைய குற்றத்தை அவர் ஒப்புக்கொண்டுள்ளதாக அதிகாரிகள் கூறினர். அமெரிக்காவில் இருந்து இரு தடவைகள் ரகசியமாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு சென்றுவந்துள்ளார். அங்குள்ள ஜிகாத் அமைப்பிலும் அவர் உறுப்பினராகக் கடமையாற்றியுள்ளார்.

அல்கெய்டா அமைப்பின் மூத்த உறுப்பினர்களிடம் இருந்து பாலத்தைத் தகர்ப்பதற்கான திட்டங்கள் குறித்து பேசியுள்ளார். செப்ரெம்பர் 11 தாக்குதலின் சூத்திரதாரியான காலித் ஷேக மொஹமட்டுடனும் இவருக்கு தொடர்புகள் இருந்ததாக சந்தேகிக்கப்படுகின்றது.

உலக வர்த்தக மையத்துக்கு அருகில் உள்ள பாலம் ஒன்றையே தகர்ப்பதற்கு இவர் திட்டமிட்டுள்ளார். தொங்கு பாலமான அதனைத் தகர்ப்பதற்கு அவர் திட்டமிட்டிருந்தார் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ம)

# சதாம் இன்னும் உயிருடன்: அமெரிக்கா கூறுகின்றது!

நியூயோர்க்,ஜுன்21

ஈராக்கின் முன்னாள் சர்வாதிகாரியான சதாம் ஹுசைன் அனேகமாக உயிருடன் இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. அவர் ஈராக்கினுள்ளேயே மறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சதாமுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் இடையில் நடந்த உரையாடல்களை இடைமறித்துக் கேட்டதன் மூலம் இதனை அறிந்துகொண்டதாக அமெரிக்க இராணுவம் கூறுகின்றது.

தற்போது அமெரிக்கப் படைகள் மீது நடத்தப்பட்டு வரும் தாக்குதல்களுக்கு சதாமே காரணம் என்றும் அதிகாரிகள் நம்புகின்றனர்.

சதாமும் அவரது நெருங்கிய சகாக்களும் நாட்டுக்குள் தமது ஆதரவை வளர்த்துக் கொள்வதற்காக இத்தகைய தொல்லை கொடுக்கும் சிறுசிறு தாக்குதல்களை நடத்தி வருவதாக அவர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்க இராணுவ அதிகாரிகளில் பலர் சதாம் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பதை உறுதியாகக் குறிப்பிடாவிட்டாலும் தாம் சதாமை விரைவில் பிடித்துவிடுவோம் என்று கருத்துக் கூறியுள்ளனர்.

ஆனால், அமெரிக்க உளவு நிறுவனங்களின் கருத்துப்படி சதாம் வேறு எங்கும் செல்லவில்லை என்று கூறுகின்றனர். அப்படி அவர் ஈராக்கை விட்டு வெளியேறி இருந்தால் உலகம் முழுவதும் பரந்துள்ள அமெரிக்க உளவாளிகளுக்கு எப்படியாவது தகவல் கிடைத்திருக்கும் என்றும் -

தனது தீவிர ஆதரவாளர்கள் மத்தியில் அவர் பாதுகாப்பாக இருப்பதனாலேயே அவரைப் பற்றிய தகவல்கள் எவையும் வெளியே தெரியவரவில்லை என்றும் - அவர்கள் கூறுகின்றனர். (ம)



சதாமைத் தேடும் அமெ. படையினர்



இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் நேற்றுமுன்தினம் தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்தார். அங்கு அவர் சென்னை ராமகிருஷ்ண சிறுவர் நிலையத்துக்கு விஜயம் செய்து அவர்களுடன் அளவளாவியபோது...

# எதிர்க்கட்சித் தலைவருக்கு ஸிம்பாப்வே நீதிமன்று பிணை!

ஹராரே,ஜுன்21

ஸிம்பாப்வேயில் அரசுக்கு எதிராகச் சதி செய்ததாகக் கூறி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் மோர்கனை பிணையில் விட உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அவருக்கு பிணை அனுமதி வழங்க அரசுத் தரப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்தபோதும் நீதிபதி அவருக்கு பிணை வழங்கினார்.

இரு வாரங்களுக்கு முன்னர் அரசுக்கு எதிராக பெரும் மக்கள் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை எதிர்க்கட்சிகள் ஒழுங்குசெய்திருந்தன. அவற்றை அரசுப் படைகள் அடக்கியிருந்தன. எனினும், அரசுக்கு எதிராக மக்களைத் தூண்டிவிட்ட குற்றச்சாட்டின் பேரில் மோர்கன் சிறையில் அடைக்கப்பட்டார்.

## உலக அரங்கில்

# இந்தோனேஷியாவில் கடந்த மாதம் 100பேர் சாவு!

ஜகார்த்தா,ஜுன்21

இந்தோனேஷியாவில் கடந்த ஒரு மாதமாகத் தொடரும் தீவிரவாதிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையின் இடையில் சிக்கி 100 பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாக பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

தேசிய பொலீஸ் படைப் பேச்சாளர் லைநூரி லுபிஸ், கொல்லப்பட்ட பொதுமக்கள், அவர்களின் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார். இந்த எண்ணிக்கைக்குள் இராணுவம் மற்றும் தீவிரவாதிகளின் சண்டையின் இடையில் சிக்கி உயிரிழந்த பொதுமக்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட பொதுமக்களில் பலர் தீவிரவாதக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் அல்லர் என்று அவர்களது உறவினர்களால் தமக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் பேட்டி ஒன்றில் தெரிவித்தார். (ம)

# மூளைக் காய்ச்சலால் சீனாவில் 18பேர் பலி!

பெய்ஜிங்,ஜுன்21

சீனாவில் பெரும் எண்ணிக்கையானோர் மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 18 சிறுவர்கள் இதனால் உயிரிழந்துள்ளனர். மேலும் 200க்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தெற்கு சீனாவின் குவான்டொங் மாகாணத்தில் இந்த நோயின் பாதிப்பு அதிகம் காணப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் சீனாவில் இந்த நோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

சீனாவைக் கலக்கிய சார்ஸ் நோய் தற்போதுதான் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ள நிலையில் மூளைக் காய்ச்சல் அதிகாரிகளுக்குப் புதிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

நுளம்பினால் பரவும் இந்த நோய மூளையையும் முள்ளாணையும் மிக மோசமாகத் தாக்குகின்றது. ஆசிய நாடுகளில் நீண்ட காலமாக இந்த நோய் இருந்து வருகின்றது. ஒவ்வோர் ஆண்டும் இந்த நோயினால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்து வருகின்றனர்.

சீனாவில் இந்தத் தடவை பெருமளவில் இந்த நோய் வெளித் தெரிய வந்ததன் காரணம், சார்ஸ் நோய் பாதித்த பகுதிகளையே இந்த நோயும் பெருமளவில் பாதித்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ம)



கிறீஸில் இடம்பெற்றுவரும் ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மத்திய சொலேடனிக்கா என்ற இடத்தில் நடந்த ஆர்ப்பாட்டம்.

# ஈழத்தமிழர் பிரச்சினையில் நெடுமாறன் இலங்கை, இந்திய அரசுகள்மீது சீற்றம்

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் 'தாய்மண்' இதழுக்காக தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் எழுதிய கட்டுரை இது.

கடந்த 15 மாதங்களாக விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள அரசிற்குமிடையே நடைபெற்ற பேச்சு மேலும் தொடர முடியாத கட்டத்தை அடைந்துள்ளது.

நோர்வே நாட்டின் முன் முயற்சியில் நடைபெற்று வந்த இந்த பேச்சு தொடங்கப்படுவதற்கு ஜனாதிபதி சந்திரிகாவோ அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவோ காரணமல்ல. அதற்கான உரிமையை அவர்கள் கொண்டாடவும் முடியாது.

'மூன்றாவது நாட்டின் முன்நிலையில் மட்டுமே பேச்சு நடத்தமுடியும்' என விடுதலைப் புலிகள் வற்புறுத்தியதையொட்டியும், சர்வதேச சமூகத்தின் நிர்ப்பந்தத்தின் பேரிலும் சந்திரிகா பேச்சு நடத்துவதற்கு வேண்டா வெறுப்புடன் சம்மதித்தார்.

ஆனால், பேச்சு நடத்தும்போது போர் நிறுத்தம் செய்யமுடியாது என்று அவர் பிடிவாதம் காட்டினார்.

விடுதலைப் புலிகள் தாமாக முன்வந்து 6 மாத காலம் போர் நிறுத்தம் செய்தனர். அந்தக் காலகட்டத்தில் சிங்கள இராணுவ விமானங்களின் குண்டு வீச்சுக்கள் தொடர்ந்தன.

ஏராளமான தமிழர்கள் பலியானார்கள்.

'விமானத் தாக்குதலை நிறுத்தாவிட்டால் கடுமையான விளைவுகள் ஏற்படும்' என பிரபாகரன் எச்சரித்தார் அந்த எச்சரிக்கையை சந்திரிகா அலட்சியம் செய்தார்.

இதன் விளைவாக கொழும்பு கட்டுநாயக்க இராணுவ விமானத் தளத்திலிருந்த 27இற்கு மேற்பட்ட விமானங்களைக் கரும்புலிகள் தவிடு பொடியாக்கினர்.

சர்வதேச சமுதாயம் சந்திரிகாவையே குற்றஞ்சாட்டியது. புலிகளோடு இணங்கிப் போர் நிறுத்தம் செய்திருந்தால் இந்தக் கதி வந்திருக்காது என இடித்துரைத்தது.

2000 ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 'தங்கள் கட்சி ஆட்சிப்பீடத்திற்கு வருமானால் போரை நிறுத்தி சமரசப் பேச்சைத் தொடங்குவோம்' என வாக்குறுதி அளித்தார். ஆனால், சந்திரிகாவோ சிங்கள தீவிரவாத கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனையுடன் கூட்டுச் சேர்ந்து 'இனப்பிரச்சினைக்கு இராணுவத்தின்மூலம் தீர்வுகாணப்போவதாக' அறிவித்தார். சிங்கள மக்கள் இராணுவத்தீர்வுக்கு எதிராகவும் சமரசப் பேச்சுக்கு ஆதரவாகவும் வாக்களித்து ரணிலை வெற்றிபெறச் செய்தனர்.

"விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள், அவர்களுடன் மட்டுமே சிங்கள அரசு பேச்சு நடத்த வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்து தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தேசிய முன்னணியை தமிழர்கள் பெரும் வெற்றிபெற வைத்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய முன்னணியின் ஆதரவுடன்தான் ஆட்சியில் அமரமுடிந்தது.

கடந்த 15 மாதங்களாக நிலவிய போர் நிறுத்தத்தின் விளைவாக நாட்டில் அமைதியான சூழ்நிலை உருவாயிற்று. வணிகமும், தொழிலும் வளர்ச்சிபெறத் தொடங்கின. மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த சிங்கள அரசும், மக்களும் அதிலிருந்து விடுபட்டனர். போரினால் பாழ்பட்டுக்கிடந்த நாட்டை புனரமைப்பதற்காக நிதியுதவி அளிக்க சர்வதேச சமுதாயமும் முன்வந்தது. ஆனால், பெரும்பாதிப்புக்கு ஆளாகி சொந்த வீடுகளில் வாழமுடியாத நிலைமையில் உள்நாட்டிலேயே அகதிகளாக வாழவேண்டிய அவதிக்குள்ளான பல லட்சம் தமிழர்களுக்கும், நீண்டகால பொருளாதாரத் தடையின் விளைவாக சொல்லொணா துயரத்தில் ஆழ்ந்திருக்கும் தமிழீழ மக்களுக்கும் எத்தகைய விடிவும் இன்னமும் கிடைக்கவில்லை என்பதுதான் அதிர்ச்சிகரமான உண்மையாகும்.

## பேச்சு முறிந்தது ஏன்?

1. தமிழீழ தனிநாட்டுக் கோரிக்கையை ஒதுக்கி வைத்துவிட்டு முழுமையான சுயாட்சி உரிமைகொண்ட கூட்டாட்சி பற்றிப் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் முன்வந்தனர். இதன் விளைவாக தமிழர்களின் அதிருப்திக்கு ஆளாகக்கூடிய அபாயம் இருப்பதை உணர்ந்த நிலையில்கூட, அதைப் பொருட்படுத்தாமல் பேச்சு நடத்த புலிகள் இசைந்தனர். ஆனால், ஆறுதடவை பேச்சு நடத்தி அதன் விளைவாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை நிறைவேற்றுவதில் சிங்கள அரசு கவனம் செலுத்தவில்லை; தயங்கியது.

2. தமிழர்களின் நகரங்களிலும், குடியிருப்புகளிலும், பள்ளிகளிலும், கோயில்களிலும் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம்களை அகற்றி மக்கள் திரும்பவும் குடியமர வழி செய்யப்படும் என்ற கோரிக்கையை நிறைவேற்றுவதற்குப் பதிலாக மேலும் மேலும் மக்கள் வாழும் பகுதிகளில் புதிய இராணுவ முகாம்களை அமைக்கும் வேலையில் இராணுவம் ஈடுபட்டது. இராணுவ அதிகாரத்தைத் தனது வசம வைத்துக்கொண்டுள்ள சந்திரிகாவே இதற்குக் காரணம்.

3. இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்றபோது, அதற்கு விடுதலைப் புலிகள் அழைக்கப்படவில்லை. அமெரிக்காவில் தடைசெய்யப்பட்ட ஓர் இயக்கத்தை அழைக்க முடியாத ஒரு நிலை இருப்பதாகக் கூறப்பட்டது. இது எந்த வகையிலும் நியாயமானதல்ல. அப்படியிருந்தால் அந்தக் கூட்டத்தை அமெரிக்காவிற்கு வெளியே வேறு ஒரு நாட்டில் நடத்தி விடுதலைப் புலிகளைப் பங்கேற்க செய்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தவறிவிட்டார்.

முக்கியமாக மேலே கண்ட காரணங்களைக் காட்டி விடுதலைப் புலிகள் பேச்சைத் தொடர மறுத்துவிட்டனர். பேச்சுக்களைத் தற்காலிகமாக நிறுத்துவதாக ஏப்ரல் 24ஆம் திகதி புலிகள் அறிவித்தனர். அதேவேளையில், 'மீண்டும் போரைத் தொடங்க மாட்டோம்' என்றும் உறுதியளித்தனர்.

## கடைசி வாய்ப்பு

இனப்பிரச்சினைக்கு அமைதியான வழியில் பேச்சின்மூலம் தீர்வு காண பிரதமர் ரணிலுக்கு கிடைத்த கடைசி வாய்ப்பை அவர் நழுவவிடும் சூழ்நிலை உருவாகியுள்ளது. பேச்சுகளில் ஒப்புக்கொள்ளப்பட்டதை எந்த வகையிலாவது நிறைவேற்றுவதற்கு பிரதமர் ரணில் முற்பட்டிருக்கவேண்டும். ஆனால், சந்திரிகாவும் இராணுவமும் சிங்கள வெறியர்களும் இடும் முட்டுக்கட்டைகளைத் தகர்த்து எறியும் துணிவு அவருக்கு இல்லாமல் போய்விட்டது.

இந்தவேளையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சியை நாம் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

இந்தியாவுக்கு சுதந்திரம் அளிப்பது பற்றிய பேச்சுக்கள் நடந்து கொண்டிருந்த நேரம் அப்போது பிரிட்டனின் பிரதமராக அட்லி பொறுப்பேற்றிருந்தார். எதிர்க்கட்சியான 'கன்சர்வேட்டிவ்' தலைவர் சர்ச்சில் 'இந்தியர்கள் சுதந்திரம் பெறுவதற்கு இன்னும் தகுதி பெறவில்லை' எனக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். இந்தியாவின் வைசிராயாக இருந்த ஜெனரல் வேவல், சர்ச்சில் பிரதமராக இருந்தபோது அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டவர். இந்தியத் தலைவர்களுடன் சுதந்திரம் குறித்த பேச்சுகளில் அவர் பல முட்டுக்கட்டைகளைப் போட்டார். அதனால் பிரதமர் அட்லி கொஞ்சமும் தயங்காமல் அவரை நீக்கிவிட்டு 'மவுண்ட்பேட்டன்' பிரபுவை அந்தப் பதவியில் நியமித்தார். அட்லியின் உறுதியான நடவடிக்கையின் விளைவாகப் பேச்சுக்கள் சீராக நடத்தப்பட்டு வெற்றியடைந்தன.

பிரிட்ஷ் பிரதமர் அட்லிக்கு இருந்த மன உறுதியும், துணிவும், விவேகமும் இலங்கை பிரதமர் ரணிலுக்கு இருக்க வேண்டும். சமரசத்திற்குக் குறுக்கே நிற்கும் இராணுவத் தளபதிகளையும் சந்திரிகாவையும் புறந்தள்ளிச் செயற்பட முன்வர வேண்டும்.

## புலிகளின் வலிமை

போரில் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்ற நிலையில்தான் விடுதலைப் புலிகள் சமரசப் பேச்சுக்குச் சம்மதித்தனர். வல்லரசான அமெரிக்காவின் இராணுவ நிபுணர்களால் அமெரிக்க இராணுவ அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பில் 15ஆயிரம் சிங்கள இராணுவ வீரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்காக ஒரு வீரருக்கு 15 லட்சம் ரூபா வரை செலவிடப்பட்டது. அது மட்டுமல்லாமல் மிகுந்த பொருள்செலவில் வாங்கப்பட்ட கனரக ஆயுதங்கள் இப்படையினருக்கு வழங்கப்பட்டது.

சிங்கள இராணுவத்தின் மிகச் சிறந்த இந்தப் படை அணி ஆனையிறவு முகாமில் நிறுத்தப்பட்டது. இந்த முகாமை சிதறடித்து வெற்றி பெற்றனர் புலிகள். அங்கு ஆயிரக்கணக்கான சிங்கள இராணுவ வீரர்கள் மாண்டனர். பல நூறுகோடி ரூபா பெறுமதியான ஆயுதங்கள் புலிகள் வசமாகின. இந்த முகாமிலிருந்து தப்பியோடியவர்களை காப்பாற்றுவதற்கு உதவவேண்டுமென்று இந்திய அரசிடம் கெஞ்சினார் சந்திரிகா.

இந்தியாவின் தலையீட்டின் பேரில் அவர்கள் தப்பிப்பிழைத்துச் செல்ல புலிகள் அனுமதித்தனர். கொடிய பகைவருக்கும் அருளும் பேருள்ளம் அவர்களுக்கு இருந்தது.

கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தை சில மணிநேரங்களில் அடியோடு அழித்தனர் புலிகள்.

இத்தகைய வலிமை கொண்ட புலிகள் சிங்களவரின் உயர்பாதுகாப்பு வலயங்களை அப்புறப்படுத்த நினைத்தால் அதைத் தடுக்கும் வலிமை இராணுவத்திற்குக் கிடையாது. அப்படி இருந்தும் புலிகள் பேச்சின்மூலம் அவற்றை அகற்றவே விரும்புகிறார்கள் என்பதை உலகம் உணர வேண்டும்.

## இந்தியாவின் கடமை

ஈழத்தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிடாமல் இந்தியா ஒதுங்கி நிற்கிறது. அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டார். "இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் நோர்வே, ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் போன்றவை தீவிரமாகப் பங்கெடுத்துள்ளன. ஆனால், இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த இந்தியா விலகியே நிற்கிறது. இந்திய அரசு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை அழைத்துப் பேசவேண்டும். அமைதிப் பேச்சுகள் வெற்றிபெறத் துணை நிற்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

பாலசிங்கத்தின் இந்த வேண்டுகோள் ஈழத்தமிழர்களின் வேண்டுகோள் மட்டுமல்ல உலகத் தமிழர்கள் அனைவரின் வேண்டுகோளாகும்.

கடந்த காலத்தில் இந்தியாவின் நிலைப்பாடு எப்படி இருந்தது? அது ராஜீவ் காலத்தில் எத்தகைய குளறுபடிக்கு ஆளானது என்பதை நாம் தெரிந்துகொள்வது நல்லது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொழும்பு நகரில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது அதற்குப் பிரதமர் இந்திரா கடும் கண்டனம் தெரிவித்தார். அப்போது வெளிநாட்டமைச்சராக இருந்த பி.வி.நரசிம்மராவை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி எச்சரிக்கை செய்தார். அதன் பின்னரே கலவரம் ஓய்ந்தது.

இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங்கம் கொழும்பிலிருந்த இந்தியத் தூதுவரின் உதவியோடு இந்தியாவுக்குப் பத்திரமாக வந்து சேர்ந்தார். பின்னர் அவர் டில்லியில் பிரதமர் இந்திராவைச் சந்தித்து எல்லா விவரங்களையும் எடுத்துரைத்தார்.

இந்திராவின் சிறப்புத் தூதுவராக ஜி.பார்த்தசாரதி இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இராஜதந்திரியான அவரை அனுப்பியதன்மூலம் இலங்கை அரசுக்கும் உலக நாடுகளுக்கும் கீழ்க்கண்ட உண்மைகளை இந்திரா உணர்த்தினார்.

1. சிறிய நாடான இலங்கையின் இனப்பிரச்சினையை இந்தியா மிக முக்கியமாகக் கருதுகிறது. சிறிய நாட்டின் பிரச்சினை என்று அதை இந்தியா ஒதுக்கிவிடவில்லை.

2. இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு உட்பட்ட ஒரு நாடு இலங்கையாகும். வேறு நாடுகள் இப்பிரச்சினையில் தலையிடுவதை இந்தியா அனுமதிக்காது.

இந்திராவின் இத்தகைய உறுதியான இராஜதந்திர நடவடிக்கையைத் தொடர்ந்து இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா பணித்தார். தமிழர் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுவதற்கு ஒப்புக்கொண்டார். ஜி.பார்த்தசாரதி முன்னிலையில் ஓராண்டு காலத்திற்கு மேலாக நடைபெற்ற இப்பேச்சுக்களின் விளைவாக இணைப்புத் திட்டம் இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், இந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் ஜெயவர்த்தனா காலம் கடத்தினார்.

அவரின் நரித்தந்திரத்தைப் புரிந்து கொண்ட இந்திரா விடுதலைப் புலிகள் உட்பட சகல போராளி இயக்கங்களுக்கும் இந்திய இராணுவ முகாம்களில் ஆயுதப்பயிற்சி அளிக்க ஏற்பாடுசெய்தார்.

இதைத் தொடர்ந்து, அடுத்தகட்ட நடவடிக்கைக்குச் செல்வதற்கு முன்பாக இந்திரா படுகொலை செய்யப்பட்டுவிட்டார்.

தமிழீழ கோரிக்கையை இந்திரா ஏற்கவில்லை. எனினும், சிங்களப் பேரினவாத மரணப் பிடியில் சிக்கித் தவித்த ஈழத் தமிழர்களை மீட்கவும் அவர்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தரவும் இந்திரா விரும்பினார். அவர் இருந்தவரை எந்த ஓர் அந்நிய நாடும் இலங்கைப் பிரச்சினையில் தலையிட அனுமதிக்கப்படவில்லை.

பிரதமர் இந்திரா ஈழத்தமிழர் பிரச்சினையில் ஆதரவாகவிருக்கிறார் என்பதால் தமிழக முதலமைச்சராகவிருந்த எம்.ஜி.ஆர்.அவருக்கு மிகுந்த ஆதரவு தெரிவித்தார். அவர்காலத்தில் தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளும் மற்ற போராளி இயக்கங்களும் தங்கு தடையில்லாமல் செயற்படுவதற்கு அனுமதிக்கப்பட்டன. பல இடங்களில் போராளிகளின் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து பயிற்சி பெற்றுத்திரும்பிச் சென்றனர். இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா இதற்கு ஆட்சேபனை தெரிவித்தபோது, தமிழ்நாட்டில் அகதிகளின் முகாம்கள் தான் உள்ளன. போராளிகளின் முகாம்கள் எதுவுமில்லையென முதல்வர் எம்.ஜி.ஆர். திட்டவட்டமாக மறுத்துவிட்டார். விடுதலைப் புலிகளுக்கு அவர் நிதியை வாரிவாரி வழங்கினார்.

தி.மு.க.தலைவர் கலைஞர் கருணாநிதி தனது பிறந்தநாள் அன்று திரண்ட நிதியை அனைத்துப் போராளி இயக்கங்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்தார். பல்வேறு கட்சித் தலைவர்களும் அவ்விதமே ஈழப் போராட்டத்திற்கு உதவிபுரிந்தனர்.

## ராஜீவின் தவறான கொள்கை

அரசியல் முதிர்ச்சியில்லாத ராஜீவ் காந்தி, பிரதமர் பொறுப்பை ஏற்ற பிறகு இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படையை கொஞ்சமும் புரிந்து கொள்ளாமல் தவறுக்கு மேல் தவறு செய்தார். வெளியுறவுத்துறை செயலாளராக இருந்த ரொமேஷ் பண்டாரி, இலங்கைத் தூதுவராகவிருந்த தீட்சித் ஆகியோரின் தவறான ஆலோசனைகள் அவரைத் தடம்புரள வைத்தன.

எல்லாவற்றிற்கும் மேலாக 'தென்னாசியாவின் பொலீஸ்காரன் இந்தியாதான்' என அமெரிக்க ஜனாதிபதி ரீகன் சூட்டிய புகழ்மாலை ராஜீவைக் கிறுகிறுக்க வைத்துவிட்டது. அமெரிக்க ஆலோசனையின் பேரில் அவசரத்தில் அள்ளித்தெளித்த கோலமாக ராஜீவ் - ஜெயவர்த்தனா உடன்பாடு கையெழுத்திடப்பட்டது. ஆனால், அவர்கள் மறுத்துவிட்டார்கள். இலங்கைப் பிரதமராக இருந்த பிரேமதாஸ இந்த உடன்பாட்டிற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். சிங்களத் தீவிரவாத இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுனவும், புத்தபிக்குகளும் இந்த உடன்பாட்டை எதிர்த்தார்கள் என்ற உண்மை இன்று நினைவு கூரத்தக்கதாகும்.

தனது இராணுவத்தினால் விடுதலைப் புலிகளை ஒடுக்கமுடியாது என்று உணர்ந்த ஜெயவர்த்தனா, ராஜீவை ஏமாற்றி இந்திய இராணுவத்தை வரவழைத்து விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு முயற்சி செய்தார்.



பிரதமர் நேருவின் . காலத்தில் கொரியா, கொங்கோ, எகிப்து போன்ற நாடுகளில் அமைதியை நிலைநாட்டுவதற்காக இந்தியப் படை சென்று புகழ்பெற்றது. ஆனால், அவரின் பேரன் ராஜீவ் காந்தியின் காலத்தில் முதன் முறையாக இந்தியப்படை அந்நிய நாட்டிற்குக் கூலிப்படையாக அனுப்பப்பட்ட அவலமும், அவமானமும் நேர்ந்தது.

இந்திய அமைதிப்படையின் தளபதிகளாகச் சென்ற லெப்.ஜெனரல் தீபிந்தர்சிங், மேஜர் ஜெனரல் தேஷ் பாண்டே ஆகியோர் பிற்காலத்தில் எழுதிய நூல்களில் மிகத்தவறான ஒரு பணியில் தாங்கள் ஈடுபடுத்தப்பட்டோம் என்று கண்டனம் தெரிவித்தனர். தங்களைத் தமிழரும் விரும்பவில்லை. சிங்களவரும் விரும்பவில்லை. எதற்காகத் தாங்கள் அனுப்பப்பட்டோம் என்பது புரியாமல் போயிற்று' என்று வேதனையுடன் குறிப்பிட்டுள்ளனர்.

நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபா வீதம் கிட்டத்தட்ட இரண்டாண்டுகளுக்கு 62,000 கோடிகளுக்கு மேல இந்திய அமைதிப்படைக்குச் செலவானது. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். பல ஆயிரம் இந்திய வீரர்கள் அங்கவீனம் ஆனார்கள். 7,000 இற்கு மேற்பட்ட ஈழத்தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வளவு இழப்புகளுக்குப் பிறகு இந்திய இராணுவம் வெளியேற வேண்டுமென அந்நாட்டின் ஜனாதிபதி பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்தார். அவமானகரமான சூழ்நிலையில் இந்தியப் படை இந்தியாவுக்குத் திரும்ப நேர்ந்தது.

ராஜீவ் காந்தியின் இலங்கைக் கொள்கை மிகத்தவறானது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது. இன்றைய பிரதமர் வாஜ்பாய், முன்னாள் பிரதமர் வி.பி.சிங், பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் போன்ற பல தலைவர்கள் ராஜீவின் கொள்கையை மிகக்கடுமையாக விமர்சித்தவர்களே. ஆனாலும் அதே தவறான கொள்கையை பி.வி.நரசிம்மராவ், தேவகௌடா, ஐ.கே. குஜ்ரால் போன்ற பலரும் தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். காங்கிரஸ் கட்சியின் ஆதரவில் அவர்கள் பதவியில் இருந்தார்கள். எனவே, அவர்கள் அவ்வாறு செய்யவேண்டியிருந்தது. ஆனால், காங்கிரஸை எதிர்த்து வெற்றி பெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் அதே தவறான கொள்கை தொடர்ந்து கடைப்பிடிக்கப்படுவது ஏன்?

இந்தியாவுக்கு வரும் சந்திரிகா, ரணில், கதிர்காமர் போன்ற சிங்கள அரசியல் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுகிற வாஜ்பாய், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேச மறுப்பது ஏன்? ஒரு தரப்புப் பிரதிநிதிகளை மட்டும் அடிக்கடி சந்தித்துப் பேசுவதும் மற்றொரு தரப்புப் பிரதிநிதிகளைச் சந்திக்க மறுப்பதும் ஒரு சார்பானது; நேர்மையற்றது. தடைவிதிக்கப்பட்ட இயக்கத்துடன் பேசஇயலாது என்று கூறப்படும் காரணம் பொருந்தாததாகும்.

நாகலாந்து, மிசோராம், திரிபுரா, அசாம் ஆகியவற்றில் தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் பிரதிநிதிகளுடன் பிரதமரும், துணைப்பிரதமரும் தொடர்ந்து பேசி வருகிறார்கள். அப்படியிருக்கும் போது விடுதலைப் புலிகளை மட்டும் புறக்கணிப்பது ஏன்?

இந்தியாவிற்கு விரோதமாக பல தடவைகள் பேசிய சந்திரிகாவை அழைத்துப் பேசுவது இந்தியாவின் மரியாதையைக் குறைக்கும் செயலாகும். இந்திய எதிர்ப்பு இயக்கமான ஜனதா விமுக்தி பெரமுன

(8ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

## அடுத்து என்ன?

அடுத்து என்ன என்ற கேள்வி இப்போது எழுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் "சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லவேண்டுமேயானால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீண்டும் பேச்சு மேசைக்கு வர வழைக்க வேண்டும்" என்றார்.

"இதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும். இது தொடர்பாக அரசு ஏற்கவேண்டிய எல்லாப் பொறுப்புக்களையும், கடமைகளையும் நாம் முழுமையாக நிறைவேற்றுவோம்" என்று பிரதமர் உறுதியளித்தார்.

அதாவது, பேச்சுக்களை மறுபடியும் தொடங்குவதற்கு புலிகள் கோரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்தத் தாம் தயார் என்றும் பிரதமர் பேசினார்.

அதேவேளை, பிரதமர் இன்னொன்றையும் குறிப்பிட்டார். எநதநிலையிலும் விடுதலைப் புலிகள் தாம் மீண்டும் போருக்குத் திரும்பப்போவதில்லை என்று உறுதிபடக் கூறியிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது; மிகவும் மகிழ்ச்சி தருகிறது என்றார்.

இன்று எழுந்துள்ள சிறுசிறு பிரச்சினைகளை தீர்த்துக் கொண்டு மீண்டும் பேச்சுமேசைக்கு வரவேண்டிய பொறுப்பு விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு உண்டு. அவர்கள் அதைச் சரிவர நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன் எனப் பிரதமர் கூறி விடுதலைப் புலிகளை பேச்சு மேசைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

விடுதலைப் புலிகள் உடனடியாகவே பிரதமருக்குப் பதிலளித்துவிட்டார்கள்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் அரசுடனான பேச்சுக்குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் 'தமிழ் நெற்' இணையத்தளத்திற்குக் கருத்துத் தெரிவித்தார்.

"இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி பிரதமர் புதிதாக விளக்கம் எதையும் தரவில்லை. தனது மனதில் தோன்றியவற்றை எல்லாம் பேசியிருக்கின்றார். டோக்கியோ மாநாடு பற்றியும் பிரதமர் குறிப்பிட்டிருக்கிறார்.

"அந்த மாநாட்டுத் தீர்மானங்களும் பிரகடனங்களும் எங்களைக் கட்டுப்படுத்தமாட்டா. அவற்றை நாம் ஏற்றுக் கொள்ளவும் மாட்டோம் என்பதை ஏற்கனவே தெரிவித்து விட்டோம்.

"அரசியல் நிர்வாக அதிகாரங்களைக் கொண்ட இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புப் பற்றி நடைமுறைச் சாத்தியமான விவரங்கள் அடங்கிய தெளிவான வரைவு ஒன்றை அரசாங்கம் எப்பொழுது முன்வைக்கிறதோ அப்பொழுதுதான் நாம் மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்வது பற்றிப் பரிசீலனை செய்வோம்" என்று அன்ரன் பாலசிங்கம் 'தமிழ்நெற்'க்கு கருத்துத் தெரிவித்தபோது திட்டவட்டமாக, வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியிருக்கிறார்.

இந்தப் பின்னணியில்தான் அடுத்து என்ன என்ற கேள்வி எங்கும் எழுப்பப்படுகிறது. அரசு என்ன செய்யப்போகிறது என்று அறிய எல்லோரும் ஆவலாக இருக்கிறார்கள்.

இன்றைய சூழ்நிலையில் இன்னொரு விடயத்தையும் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

விடுதலைப் புலிகள் பேச்சுமூலம் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். தாம் மீண்டும் போருக்குத் திரும்பப்போவதில்லை என்று எப்பொழுதும் அவர்கள் கூறிவருகிறார்கள்.

அதேவேளை, வடக்கு - கிழக்குத் தமிழ்மக்கள் மத்தியில் வேறுவிதமான கருத்துத் தலைதூக்கத் தொடங்கிவிட்டது.

அரசும் புலிகளும் சேர்ந்து போர்நிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து சுமார் ஒன்றேகால் ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் வடக்கு - கிழக்கு மக்களின் அகதிவாழ்வு அவலம் நீங்கவில்லை; அங்கே இயல்புநிலை தோன்றவில்லை.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையே வெளிநாடுகளில் ஆறு சுற்றுப் பேச்சுக்கள் நடந்துவிட்டன. எத்தனையோ திட்டங்கள் தீட்டப்பட்டன; எத்தனையோ தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. எதுவுமே உருப்படியான பலனைத் தரவில்லை.

படையினர் பலசந்தர்ப்பங்களில் போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி பொதுமக்களுக்குப் பல தொல்லைகளைக் கொடுத்து வருகிறார்கள். விடுதலைப் புலிகளைப் போருக்கு வலுக்கட்டாயமாகத் தூண்டும் வகையில் அவர்களைச் சீண்டி வருகிறார்கள்.

குறிப்பாக கடற்படையினர் சர்வதேசக் கடற்பரப்பில் கூட புலிகளின் கப்பல்களைத் தாக்கி அழிப்பதிலும் அவற்றில் மாலுமிகளாகப் பணிபுரியும் போராளிகளைக் கொல்வதிலும் முழு மூச்சாக ஈடுபட்டுவருகிறார்கள்.

முல்லைத்தீவிற்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் கடற்படையினரின் அடாவடித்தனத்தால் முன்னர் 11 போராளிகளையும் சமீபத்தில் 12 போராளிகளையும் விடுதலைப் புலிகள் இழந்துள்ளார்கள்.

இவற்றையெல்லாம் பார்த்து தமிழ் மக்கள் கொதிக்கிறார்கள்; ஆவேசம் அடைகிறார்கள்.

"இன்னும் மௌனமா? மௌனத்தைக் கலையுங்கள். ஏன் இந்தப் பொறுமை? விட்டுக்கொடுத்தது போதும். மீண்டும் நேரடி நடவடிக்கையில் இறங்குங்கள். நாங்கள் உங்களுக்குப் பின்னால் நிற்கிறோம்" என்று விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கே மகஜர்கள் கொடுக்கும் அளவுக்கு தமிழ் மக்கள் சென்றுவிட்டார்கள்.

முல்லைத்தீவு மக்கள் உட்பட வன்னி மக்கள், மட்டக்களப்பு மக்கள் கூட இப்படியான மகஜர்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் பேச்சுக்களில் நம்பிக்கை இழந்துள்ளதையும் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைச் சந்தேகிப்பதையுமே இவையெல்லாம் காட்டுகின்றன.

மக்களின் நல்வாழ்வுக்காகவே பணியாற்றும் விடுதலைப் புலிகளால் தமிழ் மக்களின் விருப்பத்திற்கு மாறாக நடக்க முடியாது. இதைக் கருத்திற்கொண்டு அரசு உடனே ஆவன செய்வதுதான் புத்திசாலித்தனம்.

# யாழ். கரையோரப் பகுதிகளில் படையினரின் புதிய காவலரண்கள்

### மக்கள் மத்தியில் அச்சம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

யாழ்.கரையோரப் பகுதியை அண்டிய பிரதேசங்களில் படையினர் புதிய காவலரண்களை நிறுவும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குருநகர் முதல் மணிப்புரி வரையான கரையோரப் பகுதிகளிலேயே படையினர் இவ்வாறு புதிய காவலரண்களையும், பாதுகாப்பு வேலிகளையும் அமைத்து வருகின்றனர்.

கொழும்புத்துறை எழிலூர் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாதபோதும் படையினர் பிரத்தியேக மின் இணைப்புகள் மூலம் மின்சாரத்தைப் பெற்று அப்பகுதிகளில் காவலரண்கள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அதனை அண்டிய பகுதிகளில் வாழும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை - அப்பகுதிகளில் பொதுமக்களிடம் அடையாள அட்டைகளை பரிசோதனை செய்வதிலும் படையினர் ஈடுபட்டு வருவதாகவும் - கூறப்பட்டது.

படையினரின் இத்தகைய செயற்பாடுகள் காரணமாக அப்பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். (எ-30-8)

## நாட்டு நடப்பு

### கீரிமலை புனித தீர்த்தம்

ஈழத்து கீரிமலை என்னும் தீர்த்தம்
ஈசனவன் நீராடும் இனிய தீர்த்தம்
அழகான கடற்கரையில் அமைந்த தீர்த்தம்
ஆன்மீக நாட்டமுள்ளோர் ஆடும் தீர்த்தம்
நகுலமுனி போற்றி நின்ற நல்ல தீர்த்தம்
நம் பிதிர்க்கு நற்கடமை செய்யும் தீர்த்தம்
மகேஸ்வரனார் மனம் வைக்கில்
இந்தத் தீர்த்தம்
மாபெரிய சிவ தீர்த்த மாகும் அன்றோ?
ஒருகோடி பணமதனை ஒதுக்கிவிட்டால்
ஒப்பரிய தீர்த்தமதாய் மாற்றலாமே!
சிவமகாலிங்கமிதைப் பேணிக் காக்கின்
சிவனாரும் உமையவளும் மகிழ்வரன்றோ?

- விகடகவி.

### உலக சமாதானத்துக்கான அமைப்பின் ஏற்பாட்டில்

# சமாதானம் குறித்து மக்களின் கருத்துக்களை அறிய முயற்சி

### பின்னர் அவை தெற்கே எடுத்துச் செல்லப்படும்

யாழ்ப்பாணம்,ஜூன்21

வீடு வீடாகச்சென்று சமாதானம் தொடர்பாக மக்களின் கருத்துக்களைக் கேட்டறியும் செயற்றிட்டம் ஒன்றை உலக சமாதானத்துக்கான ஒத்துழைப்பு மன்றம் யாழ்ப்பாணத்திலும் நடைமுறைப்படுத்தவுள்ளது.

எதிர்வரும் 29ஆம் திகதி இந்தத் திட்டம் செயற்படுத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் தொடர்பான பயிற்சிப் பட்டறையும் பொதுக் கூட்டமும் எதிர்வரும் 28ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு வை.எம்.சி.ஏயில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில், இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்குச் செய்யவேண்டிய நடவடிக்கை, அடிமட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பாதுகாப்புக் கெடுபிடிகள், இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் மற்றும் மனிதாபிமானப் பிரச்சினைகள் என்பன பற்றி ஆராயப்படவுள்ளன.

அரசமைப்புச் சீர்திருத்தம், அதிகாரப்பகிர்வு, தற்போதைய அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப் படவுள்ளன.

இங்கு ஆராயப்படும் விடயங்கள் தொடர்பாக மறுநாள் 29ஆம் திகதி காலை 9.30மணிக்கு யாழ்.குடாநாட்டில் உள்ள மதவழிபாட்டுத் தலங்கள், அரசசார்பற்ற நிறுவனம், பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடப்படும். அவர்கள் ஊடாக பொதுமக்களிடமிருந்து சமாதானம் குறித்த கருத்துக்கள் பெறப்படும். பின்னர் அவை இலங்கையின் சகல பகுதி மக்களுக்கும் எடுத்துச்செல்லப்படும் என்று தெரிவிக்கப் பட்டது.

இது தொடர்பான ஏற்பாடுகளுக்காக உலக சமாதானத்துக்கான ஒத்துழைப்பு மன்ற இலங்கைத் தலைவர் தேவானந்தா தலைமையிலான குழு ஒன்று விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளது. (ம-5)

# மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஜீவனோபாய திட்டம்

### தெரிவுசெய்யப்பட்ட 20 கிராமங்களில் நடைமுறைக்குவரும்

யாழ். மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டுள்ள 20 கிராமங்களில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த ஜீவனோபாய ஆதரவுத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்தை குடாநாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நேற்று யாழ். செயலக கேட்போர் கூடத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது.

பொன்னாலை, இருபாலை தெற்கு, இடைக்குறிச்சி, கப்புதூ, நவாலி தெற்கு, வல்லிபுரம், வேலணை தென்கிழக்கு, காரைநகர் மத்தி, புளியங்கூடல், சரவணை கிழக்கு -

உடுப்பிட்டி தெற்கு, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி, துன்னாலை மேற்கு, மத்தொளி, துன்னாலை தெற்கு, அத்தாய், துன்னாலை வடக்கு, புலோலி தெற்கு, குடத்தனை மேற்கு ஆகிய 20 கிராமங்களே இந்தத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

அடிப்படை வசதிகள் குறைந்த இந்தக் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் இத்திட்டம் அந்தந்தப் பகுதியில் உள்ள பிரதேச செயலர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-5)

### உணவுப்பொருள் வழங்கி

# குளம் புனரமைக்கும் பணிகள் இருமாத காலத்தினுள் பூர்த்தி!

### கமநலசேவை ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன்21

உலக உணவுத் திட்டத்தின் கீழ், கமநல சேவைகள் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் உணவுப் பொருள் வழங்கி, குளங்களைப் புனரமைக்கும் பணி அடுத்து இருமாத காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என கமநல சேவைகள் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கடந்த ஆண்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு முடிவுறாத நிலையில் இருந்த 8குளங்களும், கடந்த ஆண்டு அனுமதி வழங்கப்பட்டும் வேலை ஆரம்பிக்கப்படாத 16 குளங்களும், இவ்வாண்டு அனுமதிக்கப்பட்டுள்ள 23 குளங்களும் இந்த திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன.

அடுத்துவரும் இருமாதங்களுக்குள் அனைத்துக் குளங்களின் புனரமைப்புப் பணிகளும் நிறைவடையும்.

புனரமைப்புப் பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்காக கமநல சேவைகள் திணைக்களம் பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குளப் புனரமைப்புப் பணிகளில் ஈடுபட்டுவரும் விவசாயிகளுக்கான உணவுப்பொருள் விநியோகத்தைத் துரிதப்படுத்துமாறு அரச அதிபரிடமும் உலக உணவு திட்டத்திடமும் கமநல சேவைகள் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது - என்றார் அவர். (எ-8)

# பச்சை மரங்கள் தறிக்க காரைநகரில் தடை விதிப்பு

காரைநகர்,ஜூன்21

காரைநகரில் இருந்து பச்சை மரங்கள் தறிக்கப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக காரைநகர் சூழல் பாதுகாப்பு குழு அறிவித்துள்ளது.

காரைநகரில் தற்போது தினமும் பெருமளவு பச்சை மரங்கள் விறகுக்காகத் தறிக்கப்பட்டு துவிச்சக்கர வண்டிகள் மற்றும் ஏனைய வாகனங்களில் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லப் படுகிறது. இதனால் காரைநகர் பகுதி விரைவில் வனாந்தரமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளதை அடுத்து சூழல் பாதுகாப்புக் குழுவினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இதுதொடர்பான அறிவிப்பை நேற்றுமுன்தினம் காரைநகர் பகுதி முழுவதும் ஒலிபெருக்கி மூலம் சூழல் பாதுகாப்புக் குழுவினர் அறிவித்தனர். (ம-73)

### நாளை

ஆனி 07
ஞாயிற்றுக்கிழமை
(22.06.2003)
திதி : அட்டமி
முற்பகல் 10.51 வரை.
நட்சத்திரம் : உத்தரட்டாதி
முன்னிரவு 9.07 வரை.
சுபநேரம் : 8.54-10.24
ராகுகாலம் : 4.24-5.54
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

சோம்பேறித்தனம் உடையவன் இறந்தவனுக்கு ஒப்பானவன்.

# சங்கானைப் பிரதேச செயலகம் முன்பாக 2ஆம் நாளாக மறியல்

### நேற்று பொதுமக்கள் கலந்துகொண்டனர்

வலி.மேற்கு,ஜூன்21

சுழிபுரம் பகுதியில் காணாமற்போன கிராம அலுவலரைக் கண்டுபிடிக்குமாறு கேட்டு சுழிபுரம் மற்றும் மூளாய்ப் பகுதி மக்கள் நேற்று சங்கானைப் பிரதேச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இரண்டாவது நாளாக நேற்றும் பிரதேச செயலகப் பணிகள் முற்றாகத் தடைப்பட்டன.

மூளாய், காட்டுப்புலம், சுழிபுரம் ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானவர்கள் நேற்றுக் காலை 7.30 மணி முதல் இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதேச செயலக அலுவலர்கள் எவரையும் உள்ளே நுழைய அவர்கள் இடமளிக்கவில்லை. வாசலை மறித்தவாறு பொதுமக்கள் அமர்ந்திருந்தனர்.

பணிக்குச் செல்லமுடியாத நிலையில் சங்கானை பஸ்நிலையத்தடியில் கூடிய பிரதேச செயலக ஊழியர்கள் பின்னர் அங்கிருந்து தமது வீடுகளுக்குத் திரும்பியதைக் காணமுடிந்தது.

நேற்றுமுன்தினம் சங்கானைப் பிரதேச கிராம அலுவலர்கள் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டதனால் பிரதேச செயலகப் பணிகள் முற்றாகத் தடைப்பட்டிருந்தன. தொடரும் இந்தப் போராட்டத்தால் அவசியத் தேவைகளுக்காக பிரதேச செயலகத்துக்கு வருகைதந்த பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். (ம-175)

# வன்முறையைக் கைவிடக் கோருவோருக்கு....

## கனடாவிலிருந்து ஒரு பகிரங்கக் கடிதம்

புலிகள் வன்முறையை கைவிடவேண்டும் என்று கோருவோர் அறிவது!

விடுதலைப் புலிகள் வன்முறையைக் கைவிடவேண்டும் என்று நீண்ட பல மாதங்களாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. இதை விடுப்பவர்கள் யார் என்று பார்த்தால் மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்காதவர்கள். அஹிம்சைப் போராட்டத்தை ஆயுத முனையில் ஒடுக்க முயன்றவர்களாகத்தான் இருக்கின்றது.

ஒரு போராட்ட அமைப்பு தன்னைப் பலப்படுத்திக்கொண்டு தான் சார்ந்த மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெறறுக்கொள்ளும்போது சர்வதேச சமூகமும் அடக்குமுறையாளர்களும் போடும் கூச்சல்தான் இந்தப் பயங்கரவாதம், வன்முறை என்ற சொற்கள். வன்முறைக்கு வன்முறை பதிலான போது வன்முறையை ஆரம்பித்தவர்கள போடும் கூக்குரல்தான் இது.

அஹிம்சா போராட்டங்கள் வெற்றி பெற்றபோதே வன்முறைப்போராட்டங்களும் இருந்திருக்கின்றன. அந்த அஹிம்சா போராட்டங்கள் வெற்றி பெற்றதற்கு வன்முறைப் போராட்டங்களின் ஆரம்பமும், அவற்றின் அபரிமிதமான வளர்ச்சிகண்ட பயமுமே ஆகும் என்பதைப் பலரும் இன்னமும புரிந்துகொள்ளவில்லை.

இந்தவகையில், மகாத்மா காந்தி அஹிம்சைவழியில் போராடி இந்தியாவிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்க முனைப்புடன் இருந்தபோது வன்முறை அரசியலில் நம்பிக்கையுடைய சுபாஸ சந்திரபோஸ் ஓரளவுக்கு பிரட்டிஷ்ஷாருக்கு சிம்ம சொப்பனமாக இருந்தார்.

வன்முறையை கைவிடுமாறு மகாத்மா அவர்களைக் கேட்டுக்கொண்டார். ஓரளவுக்கு அஹிம்சாமுறை பயன்தரக்கூடிய அந்தக் காலத்தில் மகாத்மாவின் வேண்டுகோளை நிராகரித்து மூன்று போராளிகள் சிறையில இருந்து அவருக்குக் கடிதம் எழுதினர். அவர்களுக்கு பின்னர் மரணதண்டனைகள் விதிக்கப்பட்டன. அந்த மூன்று பேரும் தாம் ஏன் வன்முறையைத் தொடரவேண்டும் என்று மகாத்மாவிற்த எழுதிய கடிதவரிகள் இன்று விடுதலைப் புலிகள் வன்முறையை முற்றாகக் கைவிடவேண்டும் என்று கோருவோருக்கும் கொஞ்சம் பொருந்தும்.

அந்த வரலாற்றுப் புகழ்மிக்க கடித வரிகளையே இன்று எனது கடித வரிகளாகத் தர விளைகின்றேன்.

இந்தக்கடிதம் அன்று சிலவேளை ஏற்றுக்கொள்ளப்படாது இருந்திருக்கலாம். காரணம் அன்று அஹிம்சைக்கு ஓரளவு மதிப்பிருந்தது.

மேலும் வன்முறையை கைவிடுமாறு கோரிக்கை விடுத்தவர் அஹிம்சையை மட்டும் ஆயுதமாகக் கொண்ட மகாத்மா காந்தி... இன்று கோரிக்கை விடுபவர்கள்...அப்படியல்ல.

காந்தி அஹிம்சை வழியாகப் பெறறுக்கொடுத்த இந்தியாவின் படை வடக்கு-கிழக்கை ஆக்கிரமித்திருந்த காலத்தில் வன்முறை நிறுத்தப்பட்டு அஹிம்சை போராட்டம் நடத்தப்பட்டது. இறுதியில் காந்தி தேசத்தவர்களே அஹிம்சா போராளி திலீபன் இறப்பதற்குக் காரணமாயினர்.

வன்முறையை நிறுத்திய கடந்த ஒன்றரை வருட போர்நிறுத்த காலத்தில் பொதுமக்கள் நடத்திய அஹிம்சைப் போராட்டங்களின்போது வடக்கிலும் கிழக்கிலும் இதுவரை எத்தனை பேர் கொல்லப்பட்டனர் எனறும், எத்தனைபேர் காயமடைந்தனர் என்றும் உங்களுக்குத் தெரியுமா? வடமராட்சியிலும் காஞ்சிரன்குடாவிலும் எத்தனை பேர் படைமுகாம்களின் முன் நடத்திய அஹிம்சைப் போராட்டத்தில் கொல்லப்பட்டனர்; அடித்து விரட்டப்பட்டனர்.

காந்தியடிகளுக்கு கடிதம் எழுதிய போது அஹிம்சை செத்துவிடவில்லை. ஆனால், இன்று அஹிம்சையைப் போதித்த தமிழ்க் கட்சிகளே வன்முறையை முன்னெடுத்த புலிகளை முன்மொழிந்துள்ளனர்.

சாத்தான் வேதம் ஓதலாம். ஆனால், சாத்தானுக்கு முன்னால் வேதம் ஓதலாமா?

இந்நிலையில், லாகூர் சதி வழககில் மரணதண்டனை விதிக்கப்பட்டு சிறையிலிருந்தபோது பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய மூன்று இந்திய புரட்சிவீரர்கள் மகாத்மா காந்திக்கு எழுதிய கடிதத்தின் சில பகுதிகளை உங்களுக்குத் தருகின்றேன்.

வன்முறையை கைவிடவேண்டும் என்று கோருவோருக்கு இது சமர்ப்பணம்.

பெருமதிப்புக்குரிய மகாத்மா அவர்களே!

காந்தி - இர்வின் உடன்பாட்டுப் பேச்சுக்குப்பின் தாங்கள் விடுதலைப் புரட்சிப் போராளிகளுக்குப் பல வேண்டுகோள் விடுத்துள்ளீர்கள். உண்மை என்னவென்றால், ஒரு விடுதலைப் போராட்டத்தை கொள்கை ரீதியாகவோ, ஒருவருடைய விருப்பத்திற்காகவோ நிறுத்திவைக்க இயலாது. இந்த சமரச காந்தி, இர்வின் உடன்பாடு பற்றிப் பேசும்போதே இதுதான் இறுதியான சமரச உடன்பாடு என்று தாங்கள் ஒருபோதும் நினைக்கமாட்டீர்கள என்று நினைக்கின்றோம்.

தாங்கள் கோரியுள்ள எல்லாக் கோரிக்கைகளும், ஒருவேளை பிரித்தானியரால் ஏற்றுக்கொள்ளப்பட்டால் கூட இந்த நாட்டின் இலட்சியம் எல்லாம் நிறைவேறாது என்பதை அறிவுள்ள எல்லோரும் புரிந்து கொண்டிருப்பார்கள் என்பது எமது கருத்து.

பூரண சுதந்திரந்தான், எங்கள் இலட்சியம் என்று 1929ஆம் ஆண்டின லாகூர் காங்கிரஸ் மாநாட்டு தீர்மானம் சொல்கிறது. அந்த நோக்கத்தை எக காரணம் கொண்டும் மறுபரிசீலனை செய்யத் தேவையேயில்லை.

விடுதலைப் போராளிகளின் போராட்டமுறை ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொருவிதமாக உருக்கொள்கிறது. சில நேரங்களில் வெளிப்படையாகவும் மற்றும் சில நேரங்களில் இரகசியமாகவும் அது உருக்கொள்கிறது. சில சமயங்களில் வெறும ஆர்ப்பாட்டம், கிளர்ச்சிகள் மட்டுமே நடக்கும். வேறு சில நேரங்களில் ஜீவமரணப் போராட்டமாகவும் நடக்கின்றது. எந்தக் காலச்சூழலிலும் எதைச செய்யவேண்டும் என்கின்ற யுத்த நீதி போராளிகளுக்குத் தெரியும். அதை யாரும் அவர்களுக்குப் போதிக்கத் தேவையில்லை. இன்றைய சூழலில் விடுதலைப் போராளிகள் தங்கள் போராட்டத்தை நிறுத்துவதற்கான சிறபபுக் காரணங்கள் ஏதாவது இருக்கின்றதா? அப்படியெந்தவொரு காரணமும் எங்களுக்கு யாராலும் சொல்லப்படவுமில்லை. தங்கள் வேண்டுகோளிலும் தாங்கள் கூறவும் இல்லை.

எனவே, தங்கள் வேண்டுகோளை பற்றிப் பரிசீலனை செய்து கிளர்ச்சியை நிறுத்த எங்களுக்கு வழியுமில்லை. பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தாங்கள் தங்கள் கிளர்ச்சியை நிறுத்திவிட்டீர்கள்.

நூற்றுக்கணக்கான விடுதலைப் போராளிகள் இன்னமும் தலை மறைவாகத்தான் வாழவேண்டிய நிலையில் இருக்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். அரை டசினுக்கு மேற்பட்ட புரட்சி வீரர்கள் தூக்குக்கயிற்றை எதிர்நோக்கி சிறைச் சாலையில் காத்திருக்கின்றனர்.

**மகாத்மா அவர்களே!**

இவர்களைப் பற்றியெல்லாம் நீங்கள் நினைத்துக்கூடப் பார்க்கவில்லையே ஏன்? இவர்களைப் பற்றி நீங்கள் என்னதான் கூறுகிறீர்கள்.

லாகூர் சதி வழக்கில் சம்பந்தப்பட்ட பகத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகிய எங்கள் மூன்று பேருக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. தற்செயலாக எங்கள் மூவருக்கும் மக்களிடம் பெரும் புகழ் கிடைத்து விட்டது. எங்களுக்குப் புகழ் கிடைத்து விட்டதாலேயே நாங்கள்தான் விடுதலைப் போராட்ட புரட்சி இயக்கத்தின் சர்வமும் ஆன சக்தி என்று கூறிவிடமுடியாது. விடுதலைப் போராட்ட புரட்சி இயக்கம் என்பது எங்கள் மூன்று பேர்களின் வாழ்வு, சாவு பிரச்சினை மட்டுமே அல்ல. உண்மையில் எங்கள் மூன்றுபேருக்கும் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படுவதால் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு கிடைக்கும் நன்மை, எங்களைத் தண்டனையிலிருந்து விடுவித்தால் கிடைக்காது.

இவ்வளவு விடயங்கள் இருந்தும் காந்திஜி, நீங்கள் இந்தப் போராளிகளிடம் விடுதலைப் போராட்டத்தை நிறுத்திவைக்குமாறு பகிரங்கமாக வேண்டிக் கொண்டிருக்கின்றீர்கள். இதைப் பார்க்கும்போது தாங்களும் ஏகாதிபத்திய அதிகார வர்க்கத்துடன் சேர்ந்துகொண்டு விடுதலைப் போராளிகளின் இயக்கத்தை ஒடுக்க விரும்புகிறீர்கள் என்றே எல்லோரும் நினைக்க வேண்டியுள்ளது. தங்களின் நோக்கமும் அதுதான் என்பதே எங்கள முடிவு. தங்கள் வேண்டுகோள் மூலம போராளிகளின் புரட்சி இயக்கத்துக்குள்ளே பிளவையும் நம்பிக்கைத் துரோகத்தையும் தூண்டி விடுகின்றீர்கள். அப்படியில்லை என்றால், நீங்கள் புரட்சி இயக்கத்தின் தலைமையாளர்களை நேரில் சந்தித்து இதைப்பற்றி பேசியிருக்கலாம் அல்லவா?

அதுதானே உங்களுக்குச் சரியான வழி. போராட்டத்தை நிறுத்தச் சொல்வதற்கு முன்னால் அதற்குச் சரியான காரணங்களையும் அவர்களுக்கு நீங்கள் சொல்லியிருக்க வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி போராளிகளை தனிமைப்படுத்தி ஒடுக்கிவிடலாம் என்று சொல்லப்படும் நிலையில், நீங்களும் வேண்டுகோள் விடுத்திருப்பது போராளிகளுக்கு விரோதமான செயல் என்றே நாங்கள் முடிவுக்கு வருகின்றோம்.

ஒன்று - உடனே போராளித் தலைவர்களுடன் பேசி முடிவு செய்யுங்கள். அல்லது இனியும் வேண்டுகோள் விடுவதை நிறுத்திக்கொள்ளுங்கள். தாங்கள் போராளிகளுக்கு உதவி செய்யாவிட்டாலும் தயவுசெய்து அவர்கள் மீது இரங்கம் காட்டுங்கள். போராளிகளை அவர்கள் விருப்பப்படியாவது விடுங்கள். அவர்கள் தங்களைத் தாங்களே காப்பற்றிக் கொள்வார்கள். அந்த சக்தி அவர்களுக்கு உண்டு. எதிர்கால விடுதலைப் போராட்டத்தில் அவர்களுடைய தலைமை நிச்சயமானது என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மேற்கண்ட எங்கள் வேண்டுகோளைப பற்றி நன்றாகச் சிந்தித்து தங்கள் கருத்தை மக்களுக்குத் தெரிவிப்பீர்கள் என்று நம்புகின்றோம்.

இப்படிக்கு பலரில் ஒருவன்.

மகாத்மாவிற்கு சிறையில் இருந்து போராளிகள் எழுதிய இந்தக் கடிதமே இன்று என் கடிதமாக உங்களுக்கு அனுப்பிவைக்கிறேன்.

இப்படிக்கு,
**வாசகன் ரட்ணதுரை**
(கனடா)

---

# குடாநாட்டில் 4 இடங்களில் பனங்கட்டித் தொழிற்சாலை

## பனை அபிவிருத்திச் சபை நிறுவியது

யாழ். பனை அபிவிருத்திச் சபையினால் குடாநாட்டில் 4 இடங்களில் பனங்கட்டித் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

வரணி, சிங்கைநகர், ஊர்காவற்றுறை, காரைநகர் ஆகிய இடங்களிலேயே இந்தத் தொழிற்சாலைகள் நிறுவப்பட்டுள்ளன என பனை அபிவிருத்திச் சபை அதிகாரி தெரிவித்தார்.

தற்போது பனங்கட்டி மற்றும் பனம் வெல்லம் ஆகியவற்றுக்கு நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பெரும் கேள்வியை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் - அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலைகள் மூலம் நாளாந்தம் பெருமளவு பனங்கட்டி மற்றும் பனம்வெல்லம் என்பன உற்பத்தி செய்யப்பட்டு வருவதாகவும்-

இதற்குரிய பதனீரை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கி வருகின்றன எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-4)


**Jaffna College Institute of Technology**

**VADDUKODDAI, JAFFNA, SRI LANKA.**

**STUDENTS ARE WELCOME TO REGISTER FOR THESE COURSES IMMEDIATELY**

**Get Open University exemptions with Our Diplomas**

- **Diploma Courses**
  - Diploma in Computer Programming & Data Processing — *Duration: 1Year (full time)*
  - Diploma in Civil Draughtsmanship — *Duration: 1 Year (full time)*
- **Technician Diploma Courses (NDT Level Courses)**
  - Electronics & Telecommunication Engineering — *Duration: 3 Years (full time)*
- **Technician Certificate Courses**
  - Electronics & Telecommunications — *Duration: 1 Year (full time)*

**Facilities**
- LIBRARY
- HOSTEL
- SPORTS

Application forms are available at
- ★ JCIT, Vaddukoddai.
- ★ Undergraduate department, Jaffna College (Hospital Road, Jaffna)

**DIRECTOR**
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI.
E-mail: jcit@sltnet.lk (C/28484) Tele Phone: 070 - 213139


## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,ஜூன்21

தேசிய கலை இலக்கியப் பேரவையினால் வெளியிடப்பட்டுள்ள தில்லைச்சிவனின் "காவல்வேலி" சிறுகதை நூல் அறிமுகவிழா அடுத்த மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில், நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும். இந்த விழாவில் சட்டத்தரணி சோ. தேவராசா நூல் அறிமுக உரையினையும், மூதறிஞர் கலாநிதி க.சொக்கலிங்கம் சிறப்புரையினையும் நிகழ்த்துவர். (எ-ரி)

## மத்திய மாகாண அமைச்சராக ஷெபி

கண்டி,ஜூன்21

மத்திய மாகாணசபை வீடமைப்பு, மின்சக்தி, சக்திவள அபிவிருத்தி, வர்த்தக வாணிப, உல்லாசப் பயணத் துறை அமைச்சராக எம்.எஸ்.எம்.ஷெபி நேற்றுமுன்தினம் பதவியேற்றார். மத்திய மாகாண ஆளுநர் மொன்டி கொபல்லாவ முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்து பதவி ஏற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சபை உறுப்பினர் எம் எச்.அலீம், மத்திய மாகாணசபை முதலமைச்சர் வசந்த அலுவிகார ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தளபாடக் கொள்வனவுக்கு நிதி கிடைத்தது

தென்மராட்சி,ஜூன்21

பளை, வேம்பொடுகேணி சி.சி.த.க.பாடசாலை மாணவர்களின் தளபாடங்கள் கொள்வனவுக்கென யாழ். தேசிய கிறிஸ்தவ மன்றத்தினால் 60 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்கள் தளபாட வசதியின்மையால் தரையில் அமர்ந்து கல்விகற்றதை அவதானித்த மேற்படி மன்றத்தினர் தளபாடக் கொள்வனவுக்கென நிதியை வழங்கியதாக அதிபர் சி.இராமலிங்கம் தெரிவித்துள்ளார். (எ-10-117)


**பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிட்டெட்**

**சம்பளம் வழங்கல்**

பரந்தன் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளம் 26. 06. 2003 (வியாழக்கிழமை) தொடக்கம் 29. 06. 2003 (ஞாயிற்றுக்கிழமை) வரை வழமையான இடத்தில் வைத்து வழங்கப்படும்.

கா.சிவபாதசுந்தரம்
(தொழில் முகாமையாளர்)

(19311)



**25ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

மண்ணில் 02 - 11 - 1912



விண்ணில் 27 - 07 - 1978

நல்லூர், செட்டித்தெருவைச் சேர்ந்த

**அமரர் Dr.சரவணமுத்து சோமசுந்தரம்**

(இளைப்பாறிய R.M.O., நவாலி அரசினர் வைத்தியசாலை)

**திதி: 21.06.2003**

**எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள்**
**எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள்**
**நினைவுகள் எம்மை விட்டுப் பிரியாது.......!**

**சோ.சுந்தரராஜன்,**
*இல. 2, செட்டித்தெரு,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

உங்கள் பிரிவால் துயருறும்:
**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள்.**

(19320)

## புலிகளின் கப்பல் தாக்குதலினால் ஏற்பட்ட

# கசப்பான சூழலை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருக!

## வவுனியா வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் பிரதமருக்குக் கடிதம்

கடற்பரப்பில் நடந்தேறிய அனர்த்தம், மலரவிருக்கும் சமாதானத்தை குழிதோண்டிப் புதைத்துவிடாது பார்க்கவேண்டும். கசப்பான சூழலை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

- இவ்வாறு வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிய கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது. அந்த வேண்டுகோளில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

முல்லைத்தீவு கடற்பகுதியில் விடுதலைப் புலிகளின் எண்ணெய்க் கப்பல் கடந்த சனிக்கிழமை தாக்கப்பட்டு அழிக்கப்பட்டதுடன், அதில் பயணம் செய்த பன்னிரண்டு போராளிகள் காணாமற்போயுள்ளனர். இது முழு மக்களையுமே அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இந்த நடவடிக்கை 'பேச்சில் சமாதானம் செயற்பாட்டில் போர்' என்ற ஓர் உணர்வலையை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் மேலும் பீதிநிலையை ஏற்படுத்தியுள்ளது.

நிரந்தர சமாதானத்தை அடைவதற்காக போர் நிறுத்தப்பட்டு, ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பேச்சுமூலமே சமாதானத்தை அடையமுடியும் என்ற அடிப்படைக் கோட்பாட்டுக்கு அமைவாக விடுதலைப் புலிகளும், ஆட்சியாளர்களும் எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் தமது முயற்சிகளை முன்னெடுத்த வண்ணம் இருக்கிறார்கள். இவ்வேளையில், இதுபோன்ற சம்பவங்கள் இடைநிறுத்தப்படவேண்டும்.

கடந்த காலங்களில் ஏற்பட்ட உயிர், உடைமை அழிவுகள் மீண்டும் தொடராமல் இருப்பதற்காகவே இன்று ஐரோப்பிய நாடுகளின் மேற்பார்வையின் கீழ் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால், போர் நிறுத்தப்பட்டு சமாதானச்சூழல் ஏற்பட்டிருந்த காலப்பகுதியில் குறிப்பாக கடற்பரப்பில் ஏற்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும் தொடர் அனர்த்தம் காரணமாக மீண்டும் நாட்டில் இரத்த ஆறு ஓடுமோ என்ற ஐய உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

இன்று மக்களே, 'மௌனம் வேண்டாம் சீறி எழு' என்று தலைவரைக் கோரும் நிலை ஏற்பட்டிருந்தும் புலிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்ட எத்தனையோ தொடர் இடர்களின் மத்தியிலும் அவர்கள் தங்கள் பொறுமையை மக்களின் நலனுக்காக காத்து வருகின்றார்கள் என்பது வெளிப்படை உண்மையாகும். இந்நிலையில், அவர்கள் தொடர்ந்து பொறுமையைக் கடைப்பிடிப்பார்கள் என நாம் எதிர்பார்க்கமுடியாது. எனவே, இச்சூழலில் உடன்மாற்றம் ஏற்படவேண்டும்.

இன, மொழி, வேறுபாடின்றி முழுச் சமூகமும் சமாதானத்தை வேண்டிக் காத்திருக்கும் இவ்வேளையில், ஒரு சிறுபகுதியினரின் நடவடிக்கை காரணமாக சமாதான முயற்சிகள் முறிவடையக்கூடாது. அத்துடன், விடுதலைப் புலிகளின் பொறுமையும் தொடர்ந்து சோதனைக்கு உட்படுத்தப்படக் கூடாது. இந்நாட்டு மக்கள் மீண்டும் ஒரு யுத்தச் சூழலைச் சகிக்கமாட்டார்கள் என்பதே வரலாற்று உண்மை.

எனவே, மக்கள் துயரத்தில் குளிர்காயும் சமூகத்தையும் அது சமபந்தமான செயற்பாட்டில் தொடர்புடையவர்களையும் இனங்கண்டு அவர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அத்துடன், தற்பொழுது உருவாகியிருக்கும் கசப்பான சூழலை உடன் முடிவுக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். பெரும்பாலான மக்களின் உணர்பூர்வமான சமாதான சூழலை உருவாக்குவதற்கு தகுந்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்

- இவ்வாறு வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ)

## சிறு வியாபாரிகளிடமிருந்து 'வற்' வரி அறவிடாதிருக்க அமைச்சரவை முடிவு

தற்பொழுது நடைமுறையில் உள்ள 'வற்' வரி முறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதென அமைசசரவை தீர்மானித்திருக்கிது. இதன் படி சிறிய அளவில் வியாபாரம் செய்வோருக்கு நிவாரணம் கிட்டும்.

கடந்த புதனன்று கூடிய அமைச்சரவை 'வற்' வரி முறையில் மாற்றம் செய்வது குறித்து ஆராய்ந்தது.

'வற்' வரியுடன் சேர்தது மாதாந்த மொத்த விற்பனை 75ஆயிரம் ரூபாவுக்கு குறைவானது என்றால் அவவாறான சிறு வியாபாரிகளிடமிருந்து 'வற்' வரி அறவிடுவதில்லை என்று அமைச்சரவை தீர்மானித்திருக்கிறது.

இதனைவிட வெளிநாட்டு உதவிகள் மூலம் ஆரம்பிக்கப்படும் திட்டங்களில் பணிபுரியும் கொந்தராத்துக்காரர்களிடமிருந்து 'வற்'வரி அறவிடுவதை மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கிறது.

## பொங்கு தமிழுக்கு ரெலோ அமைப்பு முழு ஆதரவு

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்படவிருக்கும் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வுக்கு ரெலோ அமைப்பு தனது முழு ஆதரவைத் தெரிவித்திருக்கிறது.

எதிர்வரும் 27ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்ச்சியில் ரெலோ இயக்க உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் கட்சியின் முக்கியஸ்தாகள் கலந்துகொள்வர் என்று ரெலோ இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

# புலிகளுடன் பேச்சைத் தொடருவதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது

## தொலைக்காட்சிப் பேட்டியில் அமைச்சர் மொறகொட

கொழும்பு,ஜுன்21

புலிகளுடனான பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லவேண்டியதன் அவசியத்தை அரசு உணர்ந்துள்ளது. அதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில் பிரதமர் கவனம் செலுத்தி வருகிறார்.

- இவ்வாறு பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞானத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட சமீபத்தில் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தர்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்வதைப் புலிகள் முற்று முழுதாக நிராகரிக்கவில்லை. இதுவரை மேற்கொள்ளப்பட்ட பேச்சுக்களின் போது இணக்கம்காணப்பட்ட விடயங்களை அரசு நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள கால தாமதத்தையிட்டு அவர்கள் கவலை அடைந்துள்ளனர்.

டோக்கியோ மாநாட்டில் இலங்கைக்கு நல்ல நிதி உதவி கிடைத்திருக்கிறது. இதனை முக்கியமாக வடக்கு - கிழக்கு பகுதியின் புனரமைப்பு, அபிவிருத்திப் பணிகளுக்கு நாம் ஒதுக்கிச் செயற்படவேண்டும். அதனை உதவி வழங்கும் நாடுகள் வெகு உன்னிப்பாக அவதானிக்கும்.

அபிவிருத்திப் பணிகளின் முன்னேற்றத்தை கணித்து திருப்தியடையும் பட்சத்தில் மேலும் கூடுதலான உதவிகளை வழங்குவதில் அவை ஆர்வம்காட்டும். புலிகளின் ஒத்துழைப்புடனேயே வடக்கு - கிழக்கு பகுதிகளின் அபிவிருத்திப் பணிகள் நடைமுறைப்படுத்தப்படும்.

சமாதான முன்னெடுப்புகளில் தற்காலிமாக ஏற்பட்டுள்ள தடையை, பேச்சுக்களை முன்கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள பாரிய பின்னடைவு என அரசு கருதவில்லை.

- இவ்வாறு அமைச்சர் மொறகொட மேலும் தெரிவித்தார். (ஒ)



இன்னிசை மைந்தன் ஈழத்து சீர்காழி நயினையூர் பத்மநாதன் சிவமைந்தனின் 100ஆவது இசை அரங்கு அண்மையில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது நயினைக் கவிஞர் நாக சண்முகநாதபிள்ளை கலைஞருக்குப் பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ)

## கைதடி நவீல்டின் ஆண்டு நிறைவுவிழா

யாழ்ப்பாணம்,ஜுன்21

கைதடி நவீல்ட் செவிப்புலனிழந்தோர் பாடசாலை பழைய மாணவர் சங்க ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் இன்று காலை 8.30 மணிக்கு நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன. (எ-ரி)

## காணாமற்போனோர் சங்க உறுப்பினர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜுன்21

வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் உறுப்பினர்களுக்கான சந்திப்பொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு யாழ். முற்றவெளி, முனியப்பர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார்.

காணாமற்போனவர்கள் குறித்து வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பாக ஆராயப்படவுள்ளதாகவும் -

ஆகவே, அனைத்து உறுப்பினர்களையும் இதில் தவறாது பங்கேற்குமாறும் - சங்கச் செயலாளர் கோரியுள்ளார். (ஒ-9)



யுத்தத்திற்கு எதிராகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாகவும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களால் பிரமாண்டமான முறையில் நடத்தப்படவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பெரும் எண்ணிக்கையான பல்கலைக்கழக மாணவர்கள் கிராமங்கள் தோறும் சென்று பொங்கு தமிழின் நோக்கம் குறித்து விளக்கமளித்து வருகின்றனர்.

'பொங்கும் பானை' வடிவம் தாங்கிச் செல்லும் பிரசார வாகனம் ஒன்றையே படத்தில் காண்கிறீர்கள்.

# காவல்துறையினர் 300 பேர் பயிற்சி முடித்து வெளியேறினர்

கிளிநொச்சி, ஜுன்21

தமிழீழ காவல்துறையில் இணைந்து பயிற்சிபெற்ற புதிய அணியினரின் பயிற்சிப் பாசறை நிறைவு விழா நேற்றுமுன்தினம் மாங்குளத்தில் உள்ள காவல்துறைப் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்றது.

காலை 6.30 மணிக்கு ஆரம்பமான விழாவில் தேசியக் கொடியினை காவல்துறையின் நடுவப்பணியக மேற்பார்வையாளர் மாதவன் ஏற்றினார்.

காவல்துறைக் கொடியினை மாங்குளம் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் தெய்வேந்திரம் ஏற்றிவைத்தார்.

அகவணக்கமும் சத்தியப் பிரமாணமும் இடம்பெற்றன. பயிற்சியை முடித்துக்கொண்ட முந்நூறு பேரினதும் சாகாச விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

காவல்துறை வீரர்களின் விசேட அணிவகுப்பை காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றுக்கொண்டார். பின்னர் காவல்துறையினர் மத்தியில் அவர் உரையாற்றினார். (ஐ-ரி)

## குப்பை எரித்தபோது ஷெல் வெடித்தது மட்டுவிலில் சம்பவம்

தென்மராட்சி,ஜுன்21

மீளக்குடியமர்வதற்காகத் துப்பரவு செய்யப்பட்ட குப்பையினை எரித்தபோது ஷெல் வெடித்த சம்பவம் கடந்த புதனன்று மாலை மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கு அருகில் இடம்பெற்றது.

குப்பை எரித்தபோது வித்தியாசமான நிறத்தில் புகை எழுந்ததைக் கண்டு அருகில் நின்றவர்கள் ஓடியதால் உயிராபத்து தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# மது அரக்கன் பிடியில் 21,325 குடும்பங்கள்

மட்டக்களப்பு,ஜுன்21

மட்டக்களப்பு மாவட்டத்தில் 21ஆயிரத்து 325 மதுபானம் அருந்தும் குடும்பங்கள் இருக்கின்றன.

மாவட்ட சமுர்த்தி அலுவலகம் இவ்வாண்டு மேற்கொண்ட ஆய்வொன்றின்போது மேற்கண்ட விவரம் தெரியவந்துள்ளது.

- இவ்வாறு மாவட்ட பிரதி சமுர்த்தி ஆணையாளர் இரா.நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

மாவட்டத்தின் 14செயலகப் பிரிவுகளிலும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

களுவாஞ்சிக்குடி, வவுணதீவு, செங்கலடி செயலகப் பிரிவுகளில் 3 ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களும், கிரான் பிரிவில் 2ஆயிரத்து 269 குடும்பங்களும் இருக்கின்றன.

காத்தான்குடி, ஓட்டமாவடி, ஏறாவூர் ஆகிய பிரிவுகளில் நூற்றுக்குக் குறைவான மதுபானம் அருந்தும் குடும்பங்கள் இருக்கின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

# தென்மராட்சி மினிபஸ்களில் தவறவிடப்பட்ட அ. அட்டைகள்

## சங்க அலுவலகத்தில் பெறலாம் என அறிவிப்பு

தென்மராட்சி,ஜுன்21

தென்மராட்சி சிற்றூர்தி சேவை சங்க மினிபஸ்களில் தவறவிடப்பட்ட அடையாள அட்டைகள், பயணப்பொதிகள் ஆகியவை சங்க அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் -

உரியவர்கள் அவற்றினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

**தே.அ.அட்டை**

சின்னத்தம்பி மகாலிங்கம் - கரந்தன், நீர்வேலி வடக்கு, குமாரசாமி தரன் - சாஸ்திரியார் ஒழுங்கை, அரியாலை, பாஸ்கரன் தனலட்சுமி - 19/2, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம், பத்மநாதன் ஸ்ரீகரன் - உரும்பராய் வடக்கு, தெய்வேந்திரம் யோகராணி - அச்செழு, நீர்வேலி.

**விசேட அ.அட்டை**

வசந்தன் செல்வராணி - தக்கு சம்பாதி, துன்னாலை மேற்கு, கந்தையா இரத்தினம் - 18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், தெய்வேந்திரம் இராஜேஸ்வரி- இராசவீதி, கோப்பாய் வடக்கு, இராசதுரை தனுஷா - நாவற்குழி, கைதடி, இரத்தினேஸ்வரன் பிரதீபன் - வீரபத்திரர் கோயிலடி, காங்கேசன்துறை.

**தபால் அ.அட்டை**

பாஸ்கரன் உஷாநந்தினி - கண்ணாபுரம், கொட்டடி, யாழ்ப்பாணம்,

**தற்காலிக அ.அட்டை**

கே.விஜயராணி - நீர்வேலி வடக்கு (8ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு) காண்டீபன் - கண்டாவளை.(எ-117)

## கொழும்பில் கொலைகள்

கொழும்பு, கிராண்ட்பாஸ் மாகத்த பழைய ரயில்வே வீதிக்கு அருகில் ஒருவர் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட நபர் 45 வயதுடையவர் என்றும் கொலைக்கான காரணங்கள் உடனடியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் கிராண்ட்பாஸ் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

கொட்டாஞ்சேனையில் மற்றுமொரு நபர் நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைகள் தொடர்பான விசாரணைகள் நடைபெறுவதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ-8)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரி ஒழுங்கையில் 8பரப்புக் காணி வீடு வளவுடன், பயன்தரும் மரங்களுடன், சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் தொடர்புகொள்ளலாம். F.X. நிக்கலஸ், கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை (யாழ்ப்பாணக் கல்லூரிக்குப் பின் ஒழுங்கை). (18964)

ஜேர்மன் செப்பேட் ஆண் நாய் (ஒரு வருடம் பூர்த்தி) விற்பனைக்குண்டு. தொடர்பு: 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (அத்தியடி சந்திக் கருகில்). சந்திக்கும் நேரம்: காலை 9.00 மணிக்கு முன்பாக. (19195)

Select II Scootor விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.தயாபரன், 10/2, புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சனி, ஞாயிறுகளில் மட்டும் பார்வையிடலாம்). (19321)

## காணி விற்பனைக்கு

39/1, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில் 11/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திலகவதி சண்முகநாதன், 39/1, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (19322)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து மொத்தமாகவும் சில்லறையாகவும் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- தாசன், 158/4, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (19226)

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து உங்களுக்குத் தேவையான நிறைகளில் நியாயமான விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம்.(Electronic நிறுவை) நல்லூர் வீடியோ சென்றர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (19227)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. 1Kg 145/= தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (C/28476)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

சுத்தமான Dobermann Pincher, Dachund, Great Dane Cross நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: தபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, யாழ்ப்பாணம். (19333)

## வாடகைக்குத் தேவை

இந்து கௌரவ சைவ போசன முடைய குடும்பத்திற்கு கந்தர்மடம், திருநெல்வேலி, நல்லூரை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. தகுந்த வாடகை தரப்படும். விபர. இலக்கம் 1929 உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (19307)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1963இல் பிறந்த HOSPITALஇல் மருந்தாளராகவுள்ள சிவந்த அழகான 5'4" மணமகளுக்கு பெற்றோர் மணமகனை எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: அருளானந்தன் குருக்கடு, சுதுமலை தெற்கு. T.P.077 - 6110781. (19313)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள் 07.07.2003 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்யவும். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (19334)

## தேவை

சோடாப்பெட்டி (போத்தல்) ஏற்றி இறக்கக்கூடிய கூலி ஆள்கள் தேவை. உடன் நேரில் வரவும்.

**பிள்ளையார் ஸ்ரோர்ஸ்**

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (19839)

---

## HOUSE FOR RENT

4 BED ROOM & CAR PARKING FULLY RENOVATED UPSTAIR HOUSE (19330)

AT

**NO.7, ST. PATRICKS ROAD, JAFFNA.**

**CLOSE TO MAIN ROAD.**

Contact : 222 5957

---

## O⁺ சிறுநீரகம் தேவை

பொ. விநாயகமூர்த்தி இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சிக்கிளை முன்னாள் தலைவருக்கு O⁺ சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகின்றது. சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:

T.P.No.: 071 - 2399209, 074 - 589324,

(19301)

---

# மனமுவந்து வாழ்த்துகின்றோம்



கரணவாய் மத்தி, கரவெட்டியைச் சேர்ந்தவரும் யாழ்.போதனா வைத்தியசாலை இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தரும், வடக்கு - கிழக்கு புற்றுநோயாளர் உதவிச் சங்க முன்னாள் பொருளாளரும், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க முன்னாள் உபதலைவரும், கருணையம்பதி சன சமூக நிலையத்தின் முன்னாள் தலைவரும், கரணவாய் விவசாயிகள் அமைப்பின் முன்னாள் தலைவரும், கரணவாய் மத்தி பிரஜைகள் குழுவின் முன்னாள் உறுப்பினருமான,

## உயர்திரு. கந்தவனம் நாகலிங்கம்

அவர்கள் 20.06.2003 இல் யாழ்ப்பாண மேலதிக மாவட்ட நீதிபதி திரு.பி.சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையில் தீவு முழுவதற்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டமையையிட்டு நாம் அவரைப் பெருமகிழ்ச்சியுடன் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவரது பணி மேலும் சிறக்க இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
செ.பிரசாத், S.குணசீலன்,
தா.கதிர்காமநாதன்,
P.ஆனந்தகுமார். (J.P.)

(19326)

---

# அழைப்புக் கட்டளை

{இல.16 - பிரிவு 55(1)}

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட/நீதிமன்றத்தில்

பொன்னம்பலம் சிவப்பிரகாசம்
17/3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

வழக்குஇல.: (காசு/54) எதிர் வழக்காளி/கள்

1. சிவப்பிரகாசம் ஜெகநாதனும்
2. பெண் மகாலட்சுமியும்
துர்க்கா இல்லம்
தொம்மை வீதி, உடுவில்.

எதிராளி/கள்

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள 2ஆம் எதிராளி/களு/க்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி

பிராதில் கோரிய நிவாரணங்களைப் பெறுவதற்கு

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளாராதலினால், பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 09ஆந் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக்குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

| | |
|---|---|
| வரைந்தது | நீதிமன்றக் கட்டளைப்படி |
| லிங்கா துரைராஜா | து.சிறீமோகன் |
| வழக்காளியின் சட்டத்தரணி | பதிவாளர் |
| | மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம். |

*குறிப்பு:* விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெற விரும்பினால், பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

து.சிறீமோகன்

*கையொப்பம்:* பதிவாளர்

2003ஆண்டு ஆனி மாதம் 20ஆந் நாளாகிய இன்று (19332)

---

# ஈழத்தமிழர்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

வுடன் கரங்கோத்து நிற்கும் சந்திரிகாவை வாஜ்பாய் நம்புவது 'கொள்ளிக்கட்டையை எடுத்துத் தலையைச் சொறிவதற்கு' ஒப்பாகும்.

இந்தியாவின் பிராந்திய நலன்களுக்கு உட்பட்ட இலங்கையில் அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இராணுவ ரீதியான உறவு கொண்டிருப்பது இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு எதிரானவை என்பதை இந்திய அரசு உணரவேண்டும். இந்தியா விலகியிருப்பதால்தான் நோர்வேயும், அமெரிக்காவும் அங்கு தலையிட்டு நாட்டாண்மை செய்கின்றன.

சிங்களவர்கள் ஒருபோதும் இந்தியாவுக்கு நன்றியுடன் இருப்பவர்கள் அல்லர். இந்திய - சீனப் போரின் போதும் வங்கதேசப் போரின்போதும் இந்தியாவுக்கு எதிரான நிலை எடுத்த நாடு இலங்கையாகும்.

ஆனால், ஈழத் தமிழர்கள் அன்றும், இன்றும், என்றும் இந்தியாவோடு குறிப்பாக தமிழகத்தோடு நெருக்கமான உறவு பூண்டவர்கள் என்பதை டில்லி உணரவேண்டும்.

இந்திய அரசு தனது இலங்கைக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என தமிழக அரசியல் கட்சிகள் கூட்டாகக் குரல் கொடுக்க வேண்டும்.

சமரசப்பேச்சில் ஒப்புக்கொள்ளப்பட்டவைகளை நிறைவேற்றுமாறு சிங்கள அரசை இந்திய அரசு வற்புறுத்தவேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதியைச் சகித்துக் கொண்டு தமிழகம் இருக்காது என்ற நிலைமையை நாம் ஒன்றுபட்டு ஏற்படுத்தி ஆக வேண்டும். அப்போதுதான் இந்திய அரசு சரியான நிலைப்பாடு எடுக்கும். சிங்கள அரசும் அஞ்சிச் செயற்படும்.

---

# இன்றே முந்துங்கள்

பல்கலைக்கழகத்தில் புக்பயின்டிங்கில் தேர்வுச் சித்தி பெற்ற ஒரு பயின்டரால் ஆய்வுக் கட்டுரைகள் கணனியில் பக்கவடிவமைத்து பல்கலைக்கழகத்தின் விதிமுறைகளுக்கமைய பயின்டிங் செய்து கணனியின் துணையுடன் ஆய்வுக்கட்டுரையின் முன் அட்டையிலும் பெயர் பதித்துக் கொடுக்கப்படும். உங்கள் பதிவுகளுக்கு இன்றே முந்துங்கள்! மற்றும் றோணியோ, றபர் சீல்கள், ரென்சில் கட்டிங், பேப்பா கட்டிங் போன்ற வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**ராஜ் புக் பயிண்டிங் அன் கொம்பியூட்டர் பிறிண்டிங்**

(19331) 43, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

---

# அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சாவகச்சேரி

## மஹா கும்பாபிஷேக விழா

கிரியாரம்பம்:
30-06-2003 திங்கள் அதிகாலை

பக்தர்கள் எண்ணெய்க்காப்பு:
01-07-2003 செவ்வாய்க்கிழமை

மஹாகும்பாபிஷேகம்:
02-07-2003 புதன்கிழமை முற்பகல் 8.27 முதல் 10.27வரை

*மண்டலாபிஷேக உபயம் செய்ய விரும்புவோர் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளவும்.*

19-07-2003 சனிக்கிழமை கொடியேற்றம்

*தொடர்ந்து 10 நாள்கள் மஹோற்சவம் நடைபெறும்.*

01-08-2003 வெள்ளிக்கிழமை ஆடிப்பூரம், பெண்கள் கலந்துகொள்ளும் திருவிளக்குப் பூஜை 2.30 மணிக்கு நடைபெறும். முன்கூட்டிப் பதிவுசெய்து கொள்ளவும்.

*அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!*

ப. மஹாகணபதி சர்மா,
ஆதீனதர்மகர்த்தா.

(19241)

---

# மரண அறிவித்தல்

## திருமதி இராசையா கனகம்மா

தோப்பு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா கனகம்மா 18-06-2003 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும், சொர்ணமலர் (கனடா), இராசதுரை (வ.கி.வடபகுதி ப.நோ.கூ.ச.,அச்சுவேலி), காலஞ்சென்ற செல்வராணி மற்றும் பத்மநாதன், கமலாதேவி, இந்திராதேவி (சுவிஸ்), தர்மராஜா (கனடா), கலாநிதி, அற்புதநிதி, லிங்கேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சதாசிவம், குண்டுமணிதேவி, இராசதுரை, பவளராணி, காலஞ்சென்ற ஞானலிங்கம், மற்றும் செல்வராசா (சுவிஸ்), சிவசோதி (கனடா), வாமதேவன் (உதவி மேற்பார்வையாளர், யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), செந்தில்நாதன் (லண்டன்), தமிழாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி, தோப்பு,
அச்சுவேலி. (19325)

தகவல்:
இ. இராசதுரை (மகன்),
சு. வாமதேவன் (மருமகன்).


---

உலகப் புகழ் பெற்ற L.G சலவை இயந்திரங்கள்

Abans நிறுவனத்தின் உத்தரவாதத்துடன்

இலவச விநியோக சேவையில் பெற்றிட



LG

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans

141, POWER HOUSE ROAD, JAFFNA

TEL: 021-222-5766

(C-28488)

### கொழும்புத்துறை கிழக்கில்

# இராணுவ அரணுக்குள் நீர் விநியோகக் குழாய்

யாழ்ப்பாணம்,ஜுன்21

கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்கான நீர் விநியோகக் குழாய் இராணுவ அரணுக்குள் அமைந்திருக்கின்றது. இதன் காரணமாகவே அப்பிரதேசத்துக்கான நீர் விநியோகப பணிகளை மேற்கொள்ளமுடியவில்லை என்று யாழ்.மாநகராட்சி மன்ற நீர் வேலைப் பொறியியலாளர் தெரிவித்திருக்கின்றார்.

'குடிதண்ணீர் வசதியின்றி மீளக் குடியமர்ந்தோர் பெரும் அவதி' என்ற தலைப்பில் கடந்த 15.06.2003 உதயனில் வெளியாகியிருந்த செய்தி தொடர்பாகவே அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் அமைந்த பிரதான நீர் விநியோகக் குழாய் இராணுவ அரணுக்குள் அமைந்துள்ளது. அந்த அரணுக்குள் உட்செல்வதற்கு அனுமதியில்லை. இதன் காரணமாகவே நீர்விநியோக விஸ்தரிப்பை மேற்கொள்ள முடியவில்லை.

- இவ்வாறு உதயனுக்கு அனுப்பிய செய்திக் குறிப்பில் நீர்வேலைப் பொறியியலாளர் தெரிவித்திருக்கிறார். (ஐ)

### அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்ட

# கிராமியக் குழுக்களை மீளாய்வு செய்ய பணிப்பு

வலி.வடக்கு,ஜுன்21

இடம்பெயர்ந்த மக்களின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளுக்கென கிராம அலுவலர் ரீதியாக நியமிக்கப்பட்ட கிராமியக் குழுக்களை மீளாய்வு செய்யும்படி யாழ்செயலக திட்டப் பணிப்பாளர் பிரதேச செயலர்களை கேட்டுள்ளார்.

கிராமிய மட்டத்தில் இயங்கும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்டு இந்தக் கிராமியக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுவினரே கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்கான சிபாரிசுகளைச் செய்வதற்குப் பொறுப்பாக இருந்து வந்தார்கள்.

தற்போது கிராம மட்டத்தில் இக்குழுக்களின் பணியை விஸ்தரிக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலும் எத்தனை கிராமங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவோ அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு கிராமியக் குழுக்களை அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் புதிய ஏற்பாடுகளினால் மீளக்குடியேறியவர்களுக்கான கொடுப்பனவுகளில் மேலும் காலதாமதம் ஏற்படும் என்று கூறப்படுகிறது. (ம-86)



மக்கள் வங்கி நடத்திய 'ஜயசிறி' அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெறற க.சுவாமிநாதன் சங்கானைப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் பொ.சிவராசாவிடமிருந்து தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெறுவதை படத்தில் காணலாம். மத்தியில் சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளையும் காணப்படுகின்றார்.

*(வலி.மேற்குச் செய்தியாளர்)*

### யாழ்.குடாநாட்டில் கடந்த காலங்களில்

# 4,000 ஹெக்ரேயர் நிலப்பரப்பு உவர் நிலமாக மாறியுள்ளது

யாழ். குடாநாட்டில் சுமார் 4 ஆயிரத்து 509 ஹெக்ரேயர் பயிர்செய்கை நிலப்பரப்பு கடந்த காலங்களில் உவர் நிலமாக மாற்றமடைந்துள்ளது.

யாழ். மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை இத்தகவலைத் தெரிவித்தார். கடந்த வாரம் யாழ். செயலகத்தில் நடந்த மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் அவர் அதனைத் தெரிவித்தார்.

கடல் நீர் உட்புகுந்தமை, தொடர்ச்சியாக நீண்டகாலம் செய்கை பண்ணப்படாது நிலங்கள் விடப்பட்டமை, உப்புநீர் உட்புகாது அமைக்கப்பட்ட அணைக்கட்டுக்கள் மற்றும் துருசுகள் என்பன கவனிப்பின்றிக் கைவிடப்பட்டமை போன்ற பல்வேறு காரணங்களால் இந்த விவசாய நிலங்கள் உவர் நிலங்களாக மாறிவிட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

★ வாழைச்செய்கையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. முன்பு செய்கை பண்ணப்படாத பல இடங்களில் தற்போது வாழை செய்கை பண்ணப்படுகிறது. வெளிமாவட்டங்களுக்கும் வாழைக்குலைகள் ஏற்றிச் செல்லப்படுவதால் அவற்றுக்கு நல்ல விலையும் கிடைத்து வருகின்றது.

★ தலைமன்னார்ப் பகுதியில் பொதுப்பாடு அமைக்கப்பட்டு கடற்கரையில் இருந்து 5 மைல்களுக்கு அப்பால் குருநகர்ப் பகுதி மீனவர்களையும் தொழில் செய்ய அனுமதிப்பது என்று மன்னார் மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். ஆனால், அங்கு பிடிக்கப்படும் கடலுணவுகள் மன்னார்ப் பகுதியிலேயே விற்பனை செய்யப்பட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது.

★ யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக 25 இடங்களில் சொட்டு நீர்ப்பாசன முறையை அறிமுகப்படுத்துவதற்கு உணவு விவசாய ஸ்தாபனம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த நிறுவனப் பிரதிநிதியிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

★ உப்பாறு பகுதியில் நீர் வற்றிய காலங்களில் புழுதிப் பிரச்சினை ஏற்படுவதாகவும், இதனால் அருகில் உள்ள பகுதிகளும் உவர்நிலமாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த தென்மராட்சிப் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன், அங்கு சவுக்கு மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ம-76)

### யாழ்ப்பாண பாடசாலை மாணவரின்

# கணிதபாட அடைவினை மேம்படுத்த மாகாண திணைக்களம் நடவடிக்கை

யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கணிதபாட அடைவினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நாளைமறுதினம் கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் முதன்மை ஆசிரியர்களுக்குமான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

மாகாணக் கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.தேவநாயகம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

கடந்த மாதம் குடாநாட்டுக்கு விஜயம் செய்த மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விச் செயலாளர் மற்றும் அதிகாரிகள் குழுவினர் இங்குள்ள நிலைமையினை நேரில் பார்வையிட்ட பின்னர் குடாநாட்டு கல்வித் தரத்தை மேம்படுத்தும் திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

குடாநாட்டு மாணவர்களிடையே கணித பாடத்திலேயே அதிக வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை அதிகாரிகளால் இனங்காணப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் நடைபெறவுள்ள கூட்டத்தில் இந்த விடயம் பற்றி முக்கியமாக ஆராயப்படவுள்ளது. முதலில் மாணவர்களின் கணித பாட அடைவினை மேம்படுத்திய பின்னர் ஏனைய பாட அடைவுகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் படிப்படியாக மேற்கொள்ளப்படவுள்ளன. (ம-ரி)

### பெரும்பான்மை இனக் கைதிகளுக்கு வழங்கப்படும்போதும்

# நீண்டகால தமிழ்க் கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்படாதது ஏன்?

## கைதிகள் தரப்பில் விசனம்

யாழ்ப்பாணம்,ஜுன்21

பெரும்பான்மை இன நீண்டகால சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படுவது போன்று, நீண்டகால தமிழ்ச் சிறைக் கைதிகளுக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள் எதுவும் ஏன் மேற்கொள்ளப் படுவதில்லை என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நீண்டகால தமிழ்ச் சிறைக் கைதிகள் தரப்பில் கூறப்பட்டதாவது:-

சிறைக்கைதிகளில் நீண்டகால சிறைத்தண்டனை வழங்கப்படும் கைதிகளுக்கு புனர்வாழ்வு நடவடிக்கைகள மேற்கொள்ளப்படுவதுண்டு. சிறைக் கைதிகள், அவர்களது குடும்பத்தினர் மற்றும் சமூக நன்மை போன்றவற்றை கருத்திற்கொண்டு இநடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் நீண்டகால கைதிகள் மற்றும் குடும்பங்களை குறிப்பிட்ட பிரதேசங்களில் குடியமர்த்தி அவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் அவர்கள் சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டு சமூக அபிவிருத்திக்கும் பங்காற்ற சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

இதுபோன்ற நடைமுறைகள் பெரும்பான்மை இனக் கைதிகளுக்கு மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் தமிழ்க் கைதிகளுக்கு வழங்கப்படுவதில்லை. இது அரசினுடைய பாரபட்சமான செயற்பாடு என சுட்டிக் காட்டப்படுகிறது.

நீண்டகால கைதிகளுக்குரிய இவ்வாறான புனர்வாழ்வுச் செயற்பாடுகள தெற்கில் மட்டுமன்றி, வடக்கிலும் தெரிவுசெய்யப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுவதனையும் -

ஆனால், அங்கெல்லாம் பெரும்பான்மை இனக் கைதிகளுக்கே புனர்வாழ்வு அளிக்கப்பட்டுள்ளது என்பதனையும் - நீண்டகால தமிழ்ச் சிறைக் கைதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதேவேளை - எல்லைப்புற தமிழ்க் கிராமங்களில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நீண்டகாலக் கைதிகளை மாத்திரம் குடியமர்த்தி புனர்வாழ்வு நடவடிக்கைகளை வழங்குவதானது, திட்டமிட்டு தமிழ்க் கிராமங்களை சிங்களப் பிரதேசங்களாக மாற்றும் முயற்சியின் ஒரு வடிவம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கலந்துரையாடல்

வலிகாமம் கோட்டத்திற்கு உட்பட்ட சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள அனைத்து சனசமூக நிலையங்களின பிரதிநிதிகள், கோவில் தர்மகர்த்தாக்கள், அரசாங்க ஊழியர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திச் சங்க பிரதிநிதிகள், மாதர் சங்கப் பிரதிநிதிகள், முன்பள்ளி ஆசிரியைகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் அனைவரையும் கலந்துகொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் வேண்டியுள்ளார். (ம-86)

## போதைப்பொருள் எதிர்ப்பு தின நிகழ்வு

சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் எதிர்வரும் 26ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு தாவடி ஸ்ரீகாளி அம்பாள் சனசமூக நிலையத்தில் விசேட நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

சம்மேளனத் தலைவர் சி.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.திருநாவுக்கரசு, முன்னாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், சுதேச வைத்தியர் ஆ.தியாகராசா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொள்வர். (எ-ரி-76)

# லெபனான் சிறையிலுள்ள இலங்கையருக்கு விடுதலை

லெபனானில் பல்வேறு காரணங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டு அந்த நாட்டு சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை விடுதலை செய்ய லெபனான் அரசு தீர்மானித்துள்ளது.

'விஸா' இன்றி லெபனானில சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் இலங்கையர்கள் குறைந்தளவு தண்டப் பணத்தை செலுத்திவிட்டு நாடு திரும்புவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை - லெபனானில் இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று முதற்றடவையாக இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தத்தில் தொழிலாளர்களின் காப்புறுதி, மருத்துவம் மற்றும் நலன்புரி விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-4)

# பருத்தித்துறை இறங்குதுறையில் பழுதடைந்த 'பாஜ்'களால் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜுன்21

கடந்த காலங்களில் பழுதடைந்த 'பாஜ்'கள் பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியில் கைவிடப்பட்டுள்ளமையால் அப்பகுதி மீனவர்களும் கரையோரப் பகுதி மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பழுதடைந்த 14 'பாஜ்'கள் கரையோரத்தில் கவனிப்பு இன்றி விடப்பட்டுள்ளன. இதனால், கரையோரக் காணிகள் கடலரிப்புக்கு உள்ளாவதாகவும் அந்த மக்கள் கூறுகின்றனர்.

இவற்றைக் கடலில் மூழ்கடிப்பதற்காக அப்பகுதி மீனவர்களும் பொதுமக்களும் படையினரிடம் அனுமதி கோரியபோதும் அவர்கள் அதற்கு மறுத்துவிட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த 'பாஜ்'களை ஆழ்கடலில் மூழ்கடிப்பதன் மூலம் மண் அரிப்பு ஏற்படாமல் தடுக்கமுடியும் என்றும் -

மீனவர்களும் அப்பகுதியில் அதிகளவு சிரமங்கள் இன்றி தொழிலில் ஈடுபடமுடியும் எனவும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலத்தில் இவ்வாறு பழுதடைந்த ஓரிரு 'பாஜ்'கள் கடலில் மூழ்கடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-10-15)

# விசாரணை பிற்போடப்பட்டது

கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் வைத்து குடும்பஸ்தர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த விசாரணைக்கு தாக்குதலுக்குள்ளான நபர் சமுகமளிக்காததால் விசாரணைகள் பிற்போடப்பட்டன.

கோப்பாயைச் சேர்ந்த நாகமுத்து கந்தசாமி (வயது 56) என்ற குடும்பஸ்தர் கடந்த 10ஆம் திகதி கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் நடைபெற்ற விசாரணைகளுக்குச் சென்றபோது அங்குள்ள பொலீஸாரால் தாக்கப்பட்டதாக முறைப்பாடு செய்திருந்தார். இது தொடர்பான விசாரணைக்குச் சமுகமளிக்குமாறு யாழ். அலுவலக இணைப்பாளர் ஆர்.பி. சந்திரசேகர இரு தரப்புகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

இதனையடுத்து, கோப்பாய் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலீஸார் விசாரணைகளுக்குச் சமுகமளித்திருந்தனர். பொலீஸாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் நபர், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைபெற்று வருவதனால் விசாரணைகளுக்கு சமுகமளிக்கவில்லை. இதனால் இது தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# சைவப் புலவர் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜூன்21

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பட்டப்பரீட்சைப் பெறு பேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இம்முறை இளஞ்சைவப் புலவர் பட்டப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 12 பேரும் சைவப்புலவர் பரீட்சையில் 15 பேரும் சித்தியடைந்துள்ளனர். என சங்கத்தின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறுகள் உரியவர்களுக்குத் தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் - அவர் தெரிவித்தார்.

பட்டப் பரீட்சைகளில் சித்திபெற்றவர்களின் பெயர், முகவரி சித்திபெற்ற தரம் என்பன வருமாறு:-

**இளஞ்சைவப்புலவர்**

இந்திரா இந்திரநாயகம் (முதலாம பிரிவு, வவுனியா), சுதர்சினி தங்கேஸ்வரன் (இரண்டாம் பிரிவு - வவுனியா), பிரிந்தா தர்மலிங்கம் (இரண்டாம் பிரிவு - வவுனியா), சுதர்சினி ஆறுமுகலிங்கம் (இரண்டாம் பிரிவு - வவுனியா).

கிருஷ்ணகுமார்க் குருக்கள் முத்துலட்சுமி (இரண்டாம் பிரிவு - வவுனியா), பாக்கியநாதன் சிவகணேசன் (இரண்டாம் பிரிவு - வவுனியா) வெற்றிவேலு வரதிதாசன் மூன்றாம் பிரிவு - வட்டுக்கோட்டை), குமாரணி முத்துக்குமாரு (மூன்றாம் பிரிவு ஏழாலை).

பத்மலலிதா விமலநாதன் (மூன்றாம் பிரிவு - அராலி), செல்லப்பு திருவிளங்கம் (மூன்றாம் பிரிவு - சங்கானை), ஜனதீபா செகராசசிங்கம் (மூன்றாம் பிரிவு - பண்டத்தரிப்பு) சசிலேகா கனகசுந்தரம்பிள்ளை (மூன்றாம் பிரிவு - அச்சுவேலி).

**சைவப்புலவர்**

விஜிதா குமாரசாமி (இரண்டாம் பிரிவு - கொக்குவில்), சிவாஜினி கந்தையா (இரண்டாம் பிரிவு - உடுவில்), ஆறுமுகம் சிவகுமார் (இரண்டாம் பிரிவு - பண்டத்தரிப்பு), துளசிமலர் வைத்தி (இரண்டாம் பிரிவு - சாவகச்சேரி).

கலைச்செல்வி கந்தசாமி (இரண்டாம் பிரிவு - சுழிபுரம்), ஜெ.சிவக்கொழுந்து (இரண்டாம்பிரிவு - சுழிபுரம்), உமா பாலசிங்கம் (இரண்டாம் பிரிவு - உடுப்பிட்டி), உஷாஜினி பேரானந்தம் (இரண்டாம் பிரிவு - அல்வாய்).

கதிரமலை கவிதா (இரண்டாம் பிரிவு - கோண்டாவில்), ஆனந்தி ஜெயரட்ணம் (இரண்டாம் பிரிவு - மானிப்பாய்), இரத்தினசபாபதி குருக்கள் திருமாறன் (இரண்டாம் பிரிவு - பருத்தித்துறை), பிருந்தகுமாரி இராமச்சந்திரன் (இரண்டாம் பிரிவு- திருநெல்வேலி).

பேபிவதனா தில்லையம்பலம் (மூன்றாம்பிரிவு - வரணி), சிவசக்தி தளையசிங்கம் (மூன்றாம் பிரிவு - கோப்பாய்), மகேஸ்வரி சுப்பிரமணியம் (மூன்றாம் பிரிவு - மீசாலை).(எ)

## வெடிக்காத கிரனேட் 'ஹலோ டிரஸ்'டிடம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

நல்லூர் வைமன் வீதியில் உள்ள புலிகளின் அரசியற்றுறை கோட்ட அலுவலகத்துக்கு வீசப்பட்ட கிரனேட், வெடிக்காத நிலையில் நேற்று காலை 'ஹலோ டிரஸ்ட்' நிறுவனத்தினால் பாதுகாப்பாக எடுத்துச்செல்லப்பட்டது.

வெடிக்காத இக்கிரனேட்டை இராணுவத்தினரின் பொறியியல் பிரிவு செயலிழக்கச் செய்வதாக இருந்தது.

ஆனால், பின்னர் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் அழைப்பின் பேரில் 'ஹலோ டிரஸ்ட்' நிறுவனம் அப்பணியை மேற்கொண்டது. (ஓ-173)

## நிவாரணம் வழங்கப்படவில்லை

வடமராட்சி,ஜூன்21

வடமராட்சி வடக்கு பிரதேச மீனவர்களுக்கான மார்ச் மாத நிவாரணம் இன்னமும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிவாரணம் உரிய காலத்தில் கிடைக்கப் பெறாமையினால் மீனவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

(10 - 173)

## சுகாதாரத் தொண்டர் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

தீவகம் உட்பட யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளதால் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-173)

## மாட்டு வண்டி சவாரிப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்21

அச்செழு சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30மணிக்கு நீர்வேலி சவாரித்திடலில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

## கணனி அன்பளிப்பு

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்திற்கு கனடாவில் இயங்கும் காரை கலாசார மன்றம் ஏழு கணனிகளையும், அவற்றுக்குரிய உதிரிப்பாகங்களையும் வழங்கியுள்ளது.

மேற்படி கணனிகளை கலாசார மன்ற உறுப்பினர்கள் கொழும்பில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளையிடம் கையளித்துள்ளனர். (எ-73)

# மக்கள் முகம்



அகில இலங்கை ஆசிரிய சங்கத்தினால் சர்வதேச கல்வி முறைத்திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, அழகியல் போட்டிகளில் யாழ்.பரியோவான் கல்லூரி 6ஆம் ஆண்டு மாணவன் செல்வன் சி.சயன் கனிஷ்ட பிரிவில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் கிளிநொச்சி சென்திரேசா பாடசாலையின் பழைய மாணவரும் 5ஆம் வாய்க்கால் அம்பலவாணர் கமத்தைச் சேர்ந்த சி.சிவஞானம் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வருமாவார். (எ-30)

★ ★ ★



வல்வெட்டித்துறை கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை மாணவன் குழந்தைவேல் விஜிதன் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் 15வயதுப் பிரிவில் குண்டு போடுதல், தட்டெறிதல், ஈட்டி எறிதல் ஆகிய மூன்று போட்டிகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத்தெரிவாகியுள்ளார். (எ)

★ ★ ★



நீர்வேலி வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை துரைசிங்கம் யாழ்ப்பாண மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவர் முப்பது ஆண்டுகள் ஆசிரியராகக் கடமைபுரிந்து அண்மையில் சேவையில் இருந்து ஓய்வுபெற்றுள்ளார் (எ)

★ ★ ★



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட விநாயகமூர்த்தி ஸ்ரீசக்திவேல் கொழும்பு உயர் நீதிமன்ற நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் அகில இலங்கை முழுவதுக்குமான சமாதான நீதிவானாகச் சத்தியப் பிர மாணம் செய்து கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் பிரதித் தலைவரான இவர், வடமாகாண ஆசிரியர் சகாய நிதிச்சங்கச் செயலாளராகவும், யாழ்மாவட்ட சிக்கன கடன் வழங்கு சமாசப் பணிப்பாளராகவும், சைவப்பரிபாலன சபையின் உப தலைவராகவும் பணியாற்றிய துடன் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவராகவும் பதவி வகித்துள்ளார். (எ)

★ ★ ★



மனிதவள அபிவிருத்தி கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் தேசிய கீழைத்தேய மொழிகள், மானிடவியல் கல்விப் பிரிவினால் 2001 இல் நடத்தப்பட்ட சமூகக்கல்விப் போட்டி தொடரில் யாழ்ப்பாணக் கல்லூரியின் உயிரியல் பிரிவு மாணவன் கனகசபாபதி வாசுதேவா பொது அறிவு, எழுத்துப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தையும், அகில இலங்கை மட்டத்தில் மாணவர்களில் ஆயிரத்திற்கும் கூடிய பிரிவில் முதலாம் இடத்தையும் பெற்றுள்ளார். மூளாயைச் சேர்ந்த கூட்டுறவுப் பரிசோதகர் எஸ்.கனகசபாபதி சண்டிலிப்பாய் பிரதேச செயலக பிரதம எழுதுநர் திருமதி சிவசக்தி கனகசபாபதி தம்பதிகளின் புதல்வருமாவார். (எ-175)

# கொன்பிடரேசன் கிண்ணம்: பிரேஸில் அணி தோல்வி

பிரான்ஸில் நடைபெறும் கொன்பிடரேசன் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரில் பிரேஸில் அணி தனது முதல் போட்டியில் கமரூன் அணியிடம் தோல்வியுற்றது.

நேற்றுமுன்தினம் இப்போட்டி நடைபெற்றது. இதில், கமரூன் அணி உலக சம்பியனான பிரேஸிலை 1-0 விகிதத்தில் வென்றது.

இப்போட்டியில் பிரேஸில் அணியின் முன்னணி வீரர்களான ரிவால்டோ, ரோனால்டோ, ரோபர்டோ, கார்லோஸ ஆகியோர் விளையாடவில்லை. இவர்கள் ஸ்பெயின் லீக் போட்டிகளில பங்குபற்றுகின்றமையே இதற்குக் காரணம்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மற்றொரு போட்டியில் அமெரிக்க அணியை துருக்கி அணி 2-1 விகிதத்தில் வென்றது.

## கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கூடைப்பந்தாட்ட மத்தியஸ்தர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (எ-5)


ஸ்கிரீன் பிறிண்டிங் பயிற்சி வகுப்பு

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் நாளை (22.06.2003) முதல் ஆரம்பம்.

பயிற்சிக்காலம் 3 மாதங்கள்

முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

யசோ

35, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(19343)



பாஷையூர் புனித அந்தோனியார் இளைஞர் கழகத்தால் (14.06.2003 அன்று) நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

முதலாம் பரிசு இல. 0059

இரண்டாம் பரிசு இல. 0403

மூன்றாம் பரிசு இல. 0022

ஆறுதல் பரிசுகள்

0931, 0402, 0133, 1350, 1290

பரிசுகளை 25.06.2003இற்கு முன் கழகப் பணிமனையில் பெற்றுக்கொள்ளவும்.

(19324) - நிர்வாகம்.


# சமாதான கிண்ணக் கிரிக்கெட் போட்டி இந்திய- பாக்.வீரர்கள் ஒரே அணியில்?

இந்தியா-பாகிஸ்தான் கூட்டு அணிக்கும் உலக அணிக்கும் இடையிலான சமாதான கிரிக்கெட் கிண்ண போட்டியை நடத்த சஹாரா இந்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதி இங்கிலாந்தில் நடத்தத் திட்டமிட்டுள்ள இந்த போட்டியில் உலக அணியை எதிர்த்து இந்திய-பாகிஸ்தான் வீரர்களை விளையாடவைக்க முயற்சிக்கப்படுகிறது.

## மகளிர் ஆசிய கால்பந்தாட்டம்: இறுதிப் போட்டியில் சீனா-வடகொரியா

மகளிர் ஆசிய கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு சீனா, வடகொரியா அணிகள் தகுதி பெற்றுள்ளன. தாய்லாந்தில் இப் போட்டிகள் நடைபெறுகின்றன.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் ஜப்பானிய அணியை, வடகொரியா அணி வென்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தென்கொரிய அணியை சீன அணி, 3-1 விகிதத்தில் தோற்கடித்தது.

மூன்றாம், நான்காம் இடங்களுக்கான போட்டியில் தென்கொரியா, ஜப்பான் அணிகள் மோதவுள்ளன. இப் போட்டியில் வெற்றிபெறும் அணி அடுத்த உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜூன்21

கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறும். அரையிறுதி ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் வி.கழகமும் கப்பர்மலை யங்கம்பன்ஸ் வி.கழகமும் மோதவுள்ளன.

(ஓ-5-173)

வலி.வடக்கு,ஜூன்21

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையேயான தடகள விளையாட்டு போட்டி இன்றும், நாளையும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 8.00 மணி முதல் யாழ்ப்பாணம் மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல் தலைமையில் இடம் பெறவுள்ளது. (ஓ-5-86)

# டேவிஸ் கிண்ண டென்னிஸ் சுற்றுப்போட்டி: சவூதி அரேபியாவிடமும் இலங்கை தோல்வி

டேவிஸ் கிண்ண டென்னிஸ் தொடரில் இலங்கை அணி சவூதி அரேபியாவுடனான போட்டிகளிலும் தோல்வியைத் தழுவியது.

புதனன்று நடைபெற்ற போட்டிகளில் வியட்நாம் அணியிடம் 1-2 விகிதத்தில் இலங்கை தோல்வியுற்றிருந்தது.

வியாழனன்று பலம் வாய்ந்த அணியான சவூதி அரேபியாவிடம் ஒற்றையர் போட்டிகள் இரண்டிலும் இலங்கை தோல்வியுற்றது.

முதலாவது ஒற்றையர் போட்டியில் இலங்கையின் 2ஆம் நிலைவீரா பிராங்ளின் இமானுவேல், சவூதி அரேபியாவின் 2ஆம் நிலை வீரர் அல்முகைல் பதார் மொஹமட்டுடன் மோதினார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் 15வயது மாணவனான இமானுவலை, பதார்மொஹமட் 7-6, 6-3 விகிதத்தில வென்றார்.

மற்றொரு ஒற்றையர் போட்டியில் இலங்கையின் ஹர்ஷா கொடமான்னவை சவூதி அரேபிய வீரர் ஓமார் சுலைமான் அல் தகிப் 7-5, 6-4 விகிதத்தில் தோற்கடித்தார்.

இதனால் 2-0 விகிதத்தில் சவூதி அரேபிய அணி முன்னிலை பெற்றது. இரட்டையர் போட்டியின் பெறுபேறு இவ்வணிகளின் நிலையில் மாற்றமெதையும் ஏற்படுத்தாது என்பதால் இரட்டையர் போட்டி நடத்துவதற்கான அவசியம் இல்லாதுபோனது.

இலங்கை அணி நேற்று தனது கடைசி முதல் சுற்றுப் போட்டியில் புருணை அணியுடன் மோதவிருந்தது. ஆனால், மழை காரணமாக நண்பகல வரை ஆட்டம் ஆரம்பிக்கப்படவில்லை.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மேலுமிரு ஒற்றையர் போட்டிகளில் சிங்கப்பூர் அணியை மியண்மார் அணியும், ஓமான் அணியை பங்களாதேஷும் தோற்கடித்தன.

இதேவேளை, ஹொங்கொங்கில் நடைபெறவிருந்த டேவிஸ் கிண்ணப் போட்டியொன்று கொழும்புக்கு மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹொங் கொங் -லெபனான் அணிகளுக்கிடையிலான குழு2 டேவிஸ் கிண்ண மோதல்கள் ஹொங்கொங்கில் நடைபெறவிருந்தன.

ஆனால், சார்ஸ் அச்சுறுத்தல் காரணமாக இப்போட்டிகள் கொழும்புக்கு மாற்றப்பட்டன. இவ்விரு அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற ஒற்றையர் போட்டியொன்றில் ஹொங்கொங் வீர் ஹியுதுங் ஹியூவை லெபனான் வீர் பட்ரிக் சுக்ரி வென்றார்.

# மரண அறிவித்தல்

## திருமதி சறோஜினிதேவி ஜெயராசா

சரசாலையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி ஜெயராசா 16.06.2003 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஜெயராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற முருகேசு மற்றும் நல்லம்மாவின் ஏகபுதல்வியும் அபிராமி, சேயோன்(லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் ஸ்ரீ தில்லைநாதன்(லண்டன்), ஸ்ரீபத்மநாதன்(கொழும்பு), ஸ்ரீசிவசங்கரநாதன்(கொழும்பு) ஆகியோரின் தங்கையுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(21.06.2003) சனிக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விசுவர் வளவு,*
*சரசாலை மத்தி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
(சி-28494) செல்வி கிருபாதேவி வீரசிங்கம்.

# புனரமைக்கப்படுமா புல்லுக்குளம்?



குளத்தின் முழுத் தோற்றத்தினையும் குளக்கரை அருகே பொலீத்தீன் அதிகம் அடங்கிய குப்பைகள் குவிக்கப்பட்டிருப்பதையும் அவை காற்று வாக்கில் குளத்துக்குள் வீசப்பட்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ். முனீஸ்வரன் வீதிப் பகுதியிலுள்ள புல்லுக்குளம் மோசமான சூழல் மற்றும் சுகாதாரச் சீர்கேட்டிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.நகரின் மையப்பகுதியை அண்மித்துள்ள இக்குளத்தைப் புனரமைப்பதற்கும், பராமரிப்பதற்கும் யாழ். மாநகரசபை நிர்வாகம் இதுவரை எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென நகர மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அண்மைக்காலமாக புல்லுக்குளத்தைச் சூழவுள்ள வேம்படி வீதி மற்றும் முனீஸ்வரன் வீதிப் பகுதியில் பெருமளவு குப்பை கூளங்கள் கொட்டப்பட்டுள்ளன. பெருமளவு பொலித்தீன் மற்றும் இதர பொருள்கள் அடங்கிய இக்குப்பைக் குவியல்கள் தற்போது வீதியிலிருந்து குளத்திற்குள் தள்ளப்பட்டுள்ளன. இதனால், குளம் சுற்றுச்சூழல் ஆபத்தை எதிர்நோக்கி உள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

குளத்தின் நீர் மேற்பரப்பில் பலவித கொடிகளும் பாசிகளும் படர்ந்து வளர்ந்துள்ளன. இறந்த விலங்குக் கழிவுகளும் ஆங்காங்கு நீர் நிலையில் அழுகிக் காணப்படுகின்றன.

அசோகா ஹோட்டலில் உள்ள பொலீஸ் நிலைய கழிவுகளும் இக்குளத்தினுள் சென்று கலப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றால் குளத்துத் தண்ணீர் மிக மோசமாக அசுத்தமாக்கப்பட்டுள்ளது.

நகரின் மத்தியில் அழகாக - சுத்தமாக - பேணப்பட வேண்டிய இக்குளம் சீரழிந்து காணப்படுவது குறித்து சமூக அக்கறைகொண்ட தரப்புக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இக்குளத்தைப் புனரமைப்பது தொடர்பாக யாழ். மாநகரசபையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, அவ்வாறான திட்டங்கள் எதுவும் தற்போது சபையிடம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சில மாதங்களில் துரையப்பா விளையாட்டரங்கில் தேசிய மற்றும் சமாதான விளையாட்டு விழாக்கள் இடம்பெறவுள்ளன. இதற்காக புல்லுக்குளத்தைச் சூழ்ந்த கட்டடங்கள் மற்றும் அரங்குகள் துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், புல்லுக்குளமும் விரைவில் புனரமைக்கப்படுமா என்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ம-9)

## முன்பள்ளி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜுன்21

அல்வாய் பாரதிதாஸன் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாரதிதாஸன் சி.க.கூ.சங்கத் தலைவர் .நா.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பதில் பிரதேச செயலர் இ.சிவபுண்ணியமும், கௌரவ விருந்தினர்களாக விடுதலைப் புலிகளின் வடமராட்சி கோட்ட அரசியற்துறை பொறுப்பாளர் இ.தயா, வடமராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் துரை சத்தியசீலன் ஆகியோரும் கலந்துகொள்வர். (எ-10)

## நாய்களுக்கு சத்திர சிகிச்சை

யாழ்ப்பாணம்,ஜுன்21

நெல்லியடி, வதிரி கதிர்காம கோயில் சனசமூக நிலையத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை ஆண்நாய்களுக்கான மலடாக்கல் சத்திரசிகிச்சை இடம்பெறவுள்ளது.

வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி சிகிச்சையை வழங்க விரும்புவோர் சனசமூக நிலையத் தலைவருடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## நூல் அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஜுன்21

நாவற்குழி அறிவொளி மன்றம் நடத்தும் செல்லையா குமாரசாமி எழுதிய 'மண்ணைத் தொடாத விழுதுகள்' எனும் நாவலின் அறிமுக விழா இன்று பிற்பகல் 2மணிக்கு தென்மராட்சி மேற்கு, ப.நோ.கூ.சங்கத்தின் தலைமைப் பணிமனை மண்டபத்தில் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் கலந்துகொள்வார். (எ-10-75)

புல்லுக்குளம் பக்கமாக உள்ள

# நடைபாதைக் கடைகளை அகற்ற மாநகரசபை பணிப்பு

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ். முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளம் பக்கமாக அமைக்கப்பட்டுள்ள நடைபாதை வியாபாரக் கடைகளை உடனடியாக அங்கிருந்து அகற்றவேண்டும் என யாழ். மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

யாழ்.முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்தின் கரையோரம் அமைக்கப்பட்டுள்ள நடைபாதைக் கடைகள் சட்டவிரோதமானவை என்றும் - அவற்றை உடனடியாக அகற்றாவிடில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

யாழ். மாநகர சபை ஆணையாளர் அக்கடைகளின் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

ஆனால், மாநகரசபை தமக்கு ஒதுக்கித் தந்த இடங்களிலேயே தாம் கடைகளை அமைத்திருப்பதாகவும் -

கணிசமான பணத்தை செலவு செய்து அமைத்துள்ள தற்காலிக கடைகளை அகற்றுமாறு கோருவது எவ்வகையிலும் நியாயமற்றது எனவும் - நடைபாதை வியாபாரிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. நடைபாதைக் கடைகள் சட்டவிரோதமானதாக அமைக்கப்பட்டிருப்பின், அவற்றுக்கு மாநகரசபை வரி வசூலித்தது எவ்வாறு எனவும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இது தொடர்பாக மாநகரசபையுடன் தொடர்புகொண்டு கேட்டபோது, புல்லுக்குளத்தின் கரையோரம் நடைபாதைக் கடைகளை அமைக்குமாறு தாம் அனுமதிக்கவில்லை என்றும் -

நடைபாதைக் கடைகள் சபை எல்லைக்குள் அங்கு அமைக்கப்பட்டிருப்பினும், அவற்றுக்கு வரிவசூலிக்க மாநகரசபைக்கு அதிகாரம் உண்டு என்றும் - தெரிவிக்கப்பட்டது. ஆயினும், அந்த நடைபாதை வியாபாரிகளுக்கான மாற்று இட ஒழுங்கு குறித்து சபை வட்டாரங்கள் எதனையும் அறிவிக்கவில்லை.

அதேசமயம், தற்போது சட்டவிரோதமானவை எனக்கூறி அகற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ள நடைபாதைக் கடைகளின் எதிர்ப்புறம் உள்ள கடைகளை அகற்றுமாறு மாநகரசபை எந்த அறிவுறுத்தலும் விடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ம-9)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

காரைநகர்,ஜுன்21

காரைநகர் கோவளப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தினமும் இவை தமது கோழிகள் மற்றும் ஆடுகள் என்பவற்றை கடித்துக் குதறுவதாகவும் -

இது தொடர்பாக உரியவர்களிடம் அறிவித்தும், இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும - பொதுமக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. (எ-73)

## சொற்பொழிவு

மானிப்பாய்,ஜுன்21

மானிப்பாய் சோதி வேம்படி வீதியில் உள்ள ஸ்ரீசத்திய சாயி சேவா கலவி மேம்பாட்டு வித்தியாலயத்தில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிமுதல் 5 மணிவரை 'பகவத்கீதையும் உரையும்' என்னும் பொருள் பற்றி ஓய்வு பெற்ற நில அளவையாளர் எஸ் மயில்வாகனம் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ-90)

## வீடியோ படக்காட்சி

யாழ்ப்பாணம்,ஜுன்21

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புவியியற்துறை, மண்டபத்தில் THA SHOP ON THA HIGH STREET என்ற செக் மொழிப்படம் ஆங்கில உப தலைப்புகளுடன் காண்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# நடமாடும் கண்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஜுன்21

கொழும்பு ஒப்டிலைன் ஒப்டிக்கல்ஸ் மூக்குக் கண்ணாடி நிலையம் நடத்தும் நடமாடும் இலவச கண் சிகிச்சை முகாம் இன்று முதல் 24ஆம் திகதிவரை யாழ். குடாநாட்டில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 9மணிமுதல் பிற்பகல் ஒருமணிவரை கோண்டாவில் இராமகிருஷ்ணா மகாவித்தியாலயத்திலும் பிற்பகல் 2மணிமுதல் பிற்பகல் 6மணிவரை உரும்பிராய் இந்துக் கல்லூரியிலும் -

நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் பிற்பகல் 2 மணிமுதல் மாலை 6மணி வரை உடுவில் மகளிர் கல்லூரியிலும் -

24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிமுதல் பிற்பகல் ஒரு மணிவரை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் பிற்பகல் 2மணி முதல் மாலை 6மணிவரை யாழ். சென். சாள்ஸ் மகாவித்தியாலயத்திலும் வைத்துச் சிகிச்சை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

'சீடா' திட்டத்தின் கீழ்

# இதுவரை 2ஆயிரத்து 149 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரம் விநியோகம்

## கமநலசேவை வட்டாரங்கள் தகவல்

யாழ்ப்பாணம்,ஜுன்21

'சீடா' திட்டத்தின் கீழ் இதுவரை இரண்டாயிரத்து 149 விவசாயிகளுக்கு கடனடிப்படையில் நீர் இறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1998ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கமநல சேவைகள் திணைக்களம் மூலம் இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள கமநல சேவை நிலையங்களூடாக வழங்கப்பட்டுள்ள இந்த நீரிறைக்கும் இயந்திரங்களில் 828 'றொபின்' நீரிறைக்கும் இயந்திரங்களும், ஆயிரத்து 321 'வில்லியர்ஸ்' நீரிறைக்கும் இயந்திரங்களும் அடங்குகின்றன.

விவசாயிகளின் மேலதிக தேவை கருதி மேலும் 175 நீர் இறைக்கும் இயந்திரங்கள் கமநல சேவைகள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளன.

எனவே, தேவையான விவசாயிகள் தத்தமது விவசாய சம்மேளனங்களூடாக கமநல சேவை நிலையங்களுடன் தொடர்புகொண்டு இந்த நீரிறைக்கும் இயந்திரங்களைக் கடனடிப்படையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

இதேவேளை - 'சீடா' திட்டத்தின் கீழ் 'குபோட்டா' இரு சில்லு உழவு இயந்திரங்களும் கடனடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

உழவு இயந்திரம் தேவைப்படும் விவசாயிகள் தமது பகுதி பெரும்பாக உத்தியோகத்தர் ஊடாக கமநல சேவை நிலையத்துடன் தொடர்புகொண்டு உழவு இயந்திரத்தைப் பெற்றுக் கொள்ளமுடியும் - என்று கமநல சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-8)

# விவசாய உபகரணம் வழங்கல்

யாழ்ப்பாணம்,ஜுன்21

உணவு விவசாய ஸ்தாபனத்தின் உதவித்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளது.

எதிர்வரும் திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் கமநலசேவை நிலையங்களூடாக இவற்றை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் -

ஏற்கனவே விதை தானியங்களைப் பெற்றுக்கொண்டவர்களும், புதிதாக மீளக்குடியமர்ந்துள்ள விவசாயக் கூலியாள்களும் மண்வெட்டி, வாளி, கத்தி ஆகிய உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி-

கீரிமலை கமநலசேவை நிலையத்தில் 68பேரும், தொல்புர நிலையத்தில் 21பேரும், உடுவில் நிலையத்தில் 57 பேரும், உரும்பிராய் நிலையத்தில் 88 பேரும், கைதடி நிலையத்தில் 522 பேரும், சாவகச்சேரி நிலையத்தில் 819 பேரும் இந்த விவசாய உபகரணங்களைப் பெறவுள்ளனா எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-8)

குடாநாட்டில் படையினரால் கைதாகி

# காணாமற்போனோர் குறித்த 6ஆம் கட்ட விசாரணை ஜுலையில்

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம்,ஜுன்21

வடபகுதியில் கடந்த 1996ஆம் 97ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பான ஆறாம் கட்ட விசாரணைகள் எதிர்வரும் ஜுலை மாதம் 12ஆம் திகதி முதல் இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட முன்னாள் அரச அதிபர் தேவநேசன் நேசையா தலைமையிலான குழுவினரே இந்த விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் நடைபெறும் விசாரணைகளில் இதுவரை விசாரணைகளுக்கு அழைக்கப்படாதவர்களும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு சமுமளிக்காதவர்களும் கலந்துகொண்டு தமது முறைப்பாட்டினை தெரிவிக்கலாம் என்றும் -

விசாரணைகளுக்கு அழைக்கப்படும் ஏனையவர்களின் விவரம் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் - மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தேசிய ஒருங்கிணைப்பாளர் எம். சீ. எம் இக்பால் அறிவித்துள்ளார். (எ-5)



கோப்பாய்ப் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலக புதிய கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் பொ. இராமநாதன் நாடாவெட்டி கட்டடத்தைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம்.

பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி செ.வினோசுந்தர் மற்றும் ஐ.நா. அபிவிருத்திப் பிரிவு திட்டப் பணிப்பாளர் திருமதி ஞா.சிவயாதசுந்தரம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (எ-11)

# மந்திகை ஆஸ்பத்திரி வளவில் கால்நடைகளால் தொல்லை

மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலை வளவில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரித்துள்ளது. வைத்தியசாலையைச் சுற்றி சுற்றுமதில் முழுமையாக அமைக்கப்படாமையினால், கம்பிவேலிகளுக்கு ஊடாக கட்டாக்காலி ஆடு, மாடுகள் தினமும் உள்நுழைவதாகவும் -

அவ்வாறு நுழையும் கால்நடைகள் அங்கு நடுகை செய்யப்பட்டுள்ள பூ மரங்கள், வாழை மரங்கள் என்பனவற்றை கடித்து நாசம் செய்கின்றன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இதனால், கால்நடைகளை வெளியேற்றுவதில் வைத்தியசாலை ஊழியர்கள் தினமும் பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளதாகவும்- கூறப்பட்டது. (எ-173)

# தேவை

பிளேட்டிங் "மெசின் மைன்டர்" தேவை. உடனே நேரில் வரவும்.

**அபிராமி அச்சகம்**
சம்பியன் லேன்,
கொக்குவில். (19328)

# மனிதமேம்பாட்டு வித்தியாலய விளையாட்டுவிழா

மானிப்பாய்,ஜூன்21

மானிப்பாய் சோதி வேம்படி வீதியிலுள்ள ஸ்ரீசத்திய சாயி மனித மேம்பாட்டு வித்தியாலயத்தின் முதலாம் வருட வருடாந்த விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய அதிபர் என். கந்தசாமி தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கலந்து கொள்வார்.

(எ-90)


# 27 ஆவது பிறந்தநாள் நினைவும் 2ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்

தாயின் மடியில் 1976 - 06 - 21



தலைவன் பாதத்தில் 2001 - 07 - 10

## செல்வி மேனகா கணேசவேல்

*(ஆசிரியர்- உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயம்)*

உன்னை நாளொரு மேனியும்
பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்த
அன்னை பாவியாய்த் துடிதுடிக்க
வண்ணமாய் நீ வாழ்வாய் என இருந்தோம் - எம்
எண்ணங்களைப் பொய்ப்பித்து இறைவன்
பாதம் அடைந்து விட்டாய்!
எம் இதயத்தில் துடிப்புள்ளவரை உந்தன்
நினைவுகள் எம்மோடு உறவாடும்!
*ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

*கந்தையா உபாத்தியாயர் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (19335) - **குடும்பத்தினர்.**



# Rathy Publications

சண் - தொடர் வெளியீடுகள்
**விற்பனையாகின்றன.**

- ✦ *பொருளியல் - பல்தேர்வு வினா - விடைகள்*
- ✦ *படிப்பு வழிகாட்டிகள், கட்டுரைகள்*
- ✦ *கணக்கீடு, வணிகக்கல்வி, பொருளியல், அகராதி*
- ✦ *G.C.E.(A/L), G.A.Q. வங்கியியல் உள்வாரி, வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கு உரியவை.*

# SHAN INSTITUTE

**ECONOMICS & ACCOUNTING**

for G.C.E (A/L),
Personal Classes
(2004 - 2005).
(Tamil & English Medium)
Sundays : Banking

***A.SHANMUGALINGAM M.A.***
"Rathy Aham"
4th Mile Post,
Point Pedro Road,
Kopay South,
Jaffna. (19336)



# 20% - 25% தள்ளுபடி




**COSMO**
**டீசல் ஜெனரேட்டர்ஸ்**

- 5 வர்க்கங்கள்
- 1.8KW முதல் 10KW வரை
- சப்தமற்ற வர்க்கங்கள்
- மின்சாரத்தினால் அல்லது கைகளினால் இயக்கக்கூடியவை
- எண்ணெய் குறையும் நிலையில் தானாகவே இயக்கத்தை நிறுத்திக்கொள்பவை

மேலும் விபரங்களுக்கு
**சென்ட் அந்தனிஸ் கொன்சலிடேட்டட் லிமிட்டெட்**
516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு-10.
தொலைபேசி 337256, 337283-5, 324261-5

Access Graphics



# மரண அறிவித்தல்

## திருமதி சோதிலிங்கம் பரமேஸ்வரி

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோதிலிங்கம் பரமேஸ்வரி 19.06.2003 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சோதிலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் செல்வக்குமார் (கனடா) அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, திருச்செல்வி மற்றும் ஜெயரத்தினம் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஏரம்பமூர்த்தி அவர்களின் அன்பு மைத்துனியும் புஷ்பமலர்(கனடா) அவர்களின் அன்பு மாமியாரும் நாகபூஷணி, சிவகேசினி, மதிவதனி காலஞ்சென்ற இராசகுலேந்திரன் ஆகியோரின் பெரிய தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 19.06.2003 வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கைதடி ஊரியான் மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வே.ஜெயரத்தினம் *(குஞ்சியர்)*
சோ.செல்வகுமார் *(மகன் - கனடா)*
ந.ஏரம்பமூர்த்தி.

*கைதடி மேற்கு,*
*கைதடி.* (19339)



# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

"இறைவா என்னைக் காத்தருளும்
உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்தேன் (தி.பா.16:1)

*பூவுலகு விடைகொடுக்க பொன்னுலகை அடைந்து புகழ்*
*மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்!*
*நீங்காத நினைவுகளால் நீர் மல்கும் விழிகளுடன்*
*தாங்காத மனைவி, மக்கள், உற்றார் உலகோர்*
*ஏங்காத நாளில்லை ஏன் மறைந்தீர் எம்மைவிட்டு?*
*நீங்காத நோயகற்றும் தெவிட்டாத சேவையினால்*
*ஆண்டாண்டு போனாலும் ஆர் மறப்பார் அரிய தொண்டை!*
*மாண்டாருள் மாணிக்கமே! மகிமையெல்லாம் சேர்த்து வைத்து!*
*துண்டாத மணிவிளக்காய் துயர்களெல்லாம் துடைத்தவரே!*
*இறையின்பம் என்றென்றும் உன்னிடத்தில் நித்தியமாம்*
*குறையின்றி வாழ்வதற்காய் கோயிலெல்லாம் கும்பிடுவோம்.*



அமரர்
வைத்திய கலாநிதி **க.ஜோர்ஜ்**
**(D.A.M., R.I.M.P., J.P.)**

அன்னை மடியில் 1930.04.06
ஆண்டவரடியில் 2000.06.22

**இவரது ஆன்ம இளைப்பாற்றுத் திருப்பலி புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று (21.06.2003) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். இதில் கலந்து இவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன், நாளை (22.06.2003) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

இவரின் பிரிவாற்றாமையால் வாடும்:
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.* (19338)

# செய்திக்கொத்து

### உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு போட்டிகள்

அச்சுவேலி ஜுன் 21

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கோப்பாய் பிரதேசசபையினால விளையாட்டுப் போட்டிகள் நடததப்படவுள்ளன.

சபையின் உபஅலுவலகங்களான கோப்பாய், உரும்பிராய், புத்தூர், அச்சுவேலி, நீர்வேலி ஆகிய ஐந்து பிரிவுகளிலும், தெரிவு செய்யபபடும் வீரர்களை உள்ளடக்கியதாக இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். (எ-10-11)

### மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரி நியமனம்

வலி.கிழக்கு, ஜுன் 21

யாழ். மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரியாக செல்வி கே. அமிர்தலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரைகாலமும் முல்லைத தீவு மாவட்ட கால்நடை வைத்திய அதிகாரியாகப் பணியாற்றியவர். (எ-10-180)

### வரணி திருச்சபைக்கு போதகர் நியமனம

வரணி, ஜுன்21

வரணி தென்னிந்திய திருச்சபையின் போதகராக நெவில் நடராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் இங்கு போதகராகக் கடமையாற்றிய ரொஹான், குடத்தனை தென்னிந்திய திருச்சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (எ-10-170)

### 35 பரிசாரகருக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜுன்21

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பணிபுரிந்து பரிசாரகர் பயிற்சிநெறியை மேற் கொண்டு வரும் சுமார் 35 பேர் மேலதிக பயிற்சிநெறிகளை மேற்கொள்வதற்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு வருகைதந்து 2 நாள் பயிற்சிகளை முடித்துக் கொண்டு திரும்பியுள்ளனர். (எ-10-15)

### வரணி பாடசாலைக்கு மணி அன்பளிப்பு

வரணி, ஜுன்21

வரணி மகா வித்தியாலயத்தின் பாவனைக்கென வித்தியாலயத்தின் பழைய மாணவனும், கிராம உத்தியோகத்தருமான வே.நாகதேவன் என்பவரால் மணி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (எ-10-170)

### திரிபோஷா வழங்கவில்லை எனப் புகார்

வடமராட்சி, ஜுன்21

வடமராட்சி கிழக்கிலுள்ள தாய் சேய் சிகிச்சை நிலையங்களில் கடந்த இருமாதங்களாக திரிபோஷா மா வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், வடமராட்சிப் பகுதியிலுள்ள தாய்சேய் நிலையங்களில் வைத்து வழங்கவென இரு மாதங்களுக்கான திரிபோஷா மா பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது. எனினும், வந்து சேர்ந்துள்ள திரிபோஷா மா வடமராட்சி கிழக்கிலுள்ள தாய்சேய் சிகிச்சை நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவில்லை எனக்கூறப்பட்டது. (எ-173)

### ஞானசாரியார் கல்லூரிக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் கிடைக்கும்

வடமராட்சி கிழக்கு, ஜுன்21

கரவெட்டி ஞானசாரியார் கல்லூரிக்கு வெளிநாடுகளில் வசிக்கும் கல்லூரியின் பழைய மாணவர்களால் 'பாண்ட்'வாத்தியக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன. அத்துடன், கல்லூரிக்கான தொலைபேசி வசதியை ஏற்படுத்தவும் பழைய மாணவர்கள் முன்வந்துள்ளனர். (எ-10-182)

### வலிகாமம் பகுதியில் வீதி நாடகம்

கொழும்புத்துறை, ஜுன்21

வன்னி மாவட்டக் கலைத்தாய் மன்றத்தினர் வலிகாமப் பகுதிகளில் 'விழித்தெழும் மனிதங்கள்' என்னும் வீதி நாடக நிகழ்வை நடத்தி வருகின்றனர். தமிழர் போராட்ட வரலாற்றையும் சமகால நிலைப்பாட்டையும் எடுத்துக்கூறும் இவ்வீதி நாடகம பொ.செ.ரகுவின் உருவாக்கத்தில் இடம்பெற்று வருகின்றது. (ஏ-30)

### மலசல கூடம் அமைப்பதற்கு யு.என்.எச்.சி.ஆர். உதவி

யாழ்ப்பாணம், ஜுன்21

மாதகல் பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களுக்கு அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தினால் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

அங்குள்ள கத்திவெட்டுவான் முகாம், கேலன்காமம் முகாம் ஆகியவற்றுக்கே 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.அத்துடன், கத்திவெட்டுவான் முகாமில் 20 ஆயிரம் ரூபா செலவில குழாய்க் கிணறு அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. (எ-10-185)

## பிற்போடப்பட்டுள்ளது

இன்று (21.06.203) சனிக்கிழமை நடைபெறவிருந்த யாழ். பல்கலைக்கழக முகாமைக் கற்கைகள் வணிகபீட மாணவர் களுக்கான பிரிவுபசார விழா தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை மிகவும் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம். திகதி. விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல் :
(19344) ஏற்பாட்டுக்குழு

## மரண அறிவித்தல்

### செல்வி கலைவாரிதி அப்பாத்துரை சந்தானலட்சுமி

**(பிரபல வயலின் கலைஞர்)**

மூளாய் வீதி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வி அப்பாத்துரை சந்தானலட்சுமி அவர்கள் நேற்று (20.06.2003) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொ.அப்பாத்துரை, திருமதி மகேஸ்வரி அப்பாத்துரையின் மகளும் ஜெயராணி, இந்திராணி, காலஞ்சென்ற சரவணபவன், சிவகுமார், காலஞ்சென்ற யோகராணியின் அன்புச் சகோதரியும் ஐங்கரமூர்த்தி, சிவமலர், சண்முகராணி ஆகியோரின் மைத்துனியும் சாந்தினி, தர்சினி, ஆகியோரின் சிறியதாயும் சாமினி, நிரோசன், லக்ஷிகா ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2003) சனிக்கிழமை முற்பகல் 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, வழுக்கையாறு மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.* (C-28606) தகவல்: அ.சிவகுமார். (சகோதரன்)

# எமது வாழ்விடங்களில் இருந்து ராணுவத்தை வெளியேற்றுவதற்கு பொங்கு தமிழே இறுதிச் சந்தர்ப்பம்!

## பல்கலைக்கழகச் சமூகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 21

எமது வாழ்விடங்களில் உள்ள இராணுவத்தினரை, வன்முறையின்றி வெளியேற்ற பொங்கு தமிழ் நிகழ்வே இறுதிச்சந்தர்ப்பம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ். பல்கலைக்கழகச் சமூகம்.

எதிர்வரும் 27ஆம் திகதி யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள 'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வு தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசுக்கும் புலிகளுக்குமிடையில நடைபெற்ற சமாதானப் பேச்சுக்கள் தமிழ் மக்களின் வாழ்வில் இயல்புநிலை ஏற்படாத காரணத்தினால் தடைப்பட்டுப் போயுள்ளது. தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இராணுவம் தங்கியிருப்பதினாலேயே மக்களின் வாழ்வில் இயல்புநிலை ஏற்படவில்லை. தமிழர் தாயகப் பிரதேசத்தில் முகாமிட்டிருக்கும் இராணுவம் அப்பாவிப் பொதுமக்கள் மீதும் புலிகள் மீதும் தாக்குதல்களை மேற்கொள்வதன் மூலம் யுத்தத்திற்கான சூழ்நிலையை உருவாக்கி வருகிறது.

இவை எல்லாம் இராணுவம் எமது வாழ்விடங்களில் இருப்பதனாலேயே ஏற்படுகின்றன. இதனால் தமது வாழ்விடங்களில் இராணுவம் குடிகொண்டிருப்பதனை தமிழ் மக்கள் விரும்பவில்லை. ஆனால், இராணுவம் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காகவே யாழ்ப்பாணத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், மக்கள் இராணுவம் வெளியேறுவதனை விரும்பவில்லை என்றும் அரசு சர்வதேச சமூகத்திற்கு பொய்ப்பிரசாரம் செய்துவருகிறது. சர்வதேச சமூகம் அரசின் கருத்துக்களை நம்பி உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி மக்கள் குடியிருப்புக்களில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி, மக்கள் மீளக் குடியமர்வுக்கு வழிசெய்ய வேண்டுமென அரசுக்கு அழுத்தம் கொடுக்காது மௌனமாக இருப்பதுடன் அரசுக்கு நிதி, ஆயுத, தளபாட உதவிகளையும் செய்து வருகிறது. எனினும், சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்டுள்ள இந்நிலையில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் விருப்பங்களை அறிய முற்படுகின்றது.

இந்நிலையில், நாம் அனைவரும் அணிதிரண்டு,

"நாங்கள் எங்கள் வீடுகளிற்கு செல்வதற்காக, இராணுவத்தினரே உங்கள் வீடுகளிற்குச் செல்லுங்கள்"

என்று அரசின் பொய்ப்பிரசாரத்தை முறியடிக்கும் வகையில் சர்வதேச சமூகத்திற்கு ஒருமித்த குரலில் வெளிப்படுத்துவோமாயின் சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற முடியும். மீண்டும் துப்பாக்கிகளின்றி, யுத்தமின்றி, இரத்தமின்றி, வன்முறைகள், கைதுகள், சித்திரவதைகள், காணாமல் போதல்கள், அவலங்கள் இன்றி ஓர் உயிரைத் தானும் இழக்காமல் எமது வாழ்விடங்களிலுள்ள இராணுவத்தினரை வெளியேற்றி உரிமைகளை வென்றெடுக்க இதுவே இறுதிச் சந்தர்ப்பம்.

இதற்காக யாழ். பல்கலைக்கழக சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் பொங்குதமிழ் நிகழ்விற்கு நாம் பல்லாயிரக் கணக்கில் ஒன்றிணைந்து எதிர்வரும் 27ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் கூடி எமது விருப்பங்களை வெளிப்படுத்துவோம் - என்றுள்ளது.

### சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜுன்21

ஊர்காவற்றுறை,புளியங்கூடல் செருத்தனைப்பதி ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ஒ-10)

* * *

சாவகச்சேரி, ஜுன்21

மீசாலை திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார் ஆலய மகா கணபதி ஹோமம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் ஆலய பிரதம குரு சிதம்பரநாதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த மகா ஹோமம் நாட்டில் அமைதி, சாந்தி நிலவ வேண்டி நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஒ-31)


லஷ்சுமி சினிமா
இணுவில்
இன்று முதல்
வில்லன்
அஜித்குமார், மீனா, கிரண் நடித்த
காட்சி நேரம்: (ரீலஸ்)
10.30, 2.30, 6.30 (ப.நே.) (19306)

நாகம்ஸ் சுன்னாகம்
இன்று முதல்
பிரகாஷ் ராஜ். மீனா. ரகுவரன் நடித்த
"தயா" (ரீலஸ்)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு விசேடகாட்சி 7.00 (பு.நே.)
(19340)

நிறைஞ்சனாஸ்
விஜயகாந்த், சௌந்தர்யா, செந்தில், கவுண்டமணி நடித்த
சொக்கத்தங்கம் (ரீலஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இற்கு
BEHIND ENEMY LINES

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு.
K.S.ரவிக்குமாரின்

சரத்குமார், ஜெயராம், மீனா, ரம்யாகிருஷ்ணன்
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

லிபேட்டி அச்சுவேலி

சத்தியராஜ் மகன்... சிபி, ஷெரீன், நாசர் நடித்த
STUDENT No 1 (ரீலஸ்)
தினசரி காட்சி 3.00, 7.00 (பு.நே)
இந்தியாவில் அதிகநாள் ஓடிய வெற்றிப்படம்
THE SCORPION KING (ரீலஸ்)
(சண்டைப்படம்) தினசரி காலை 11.00 மணி


## அனுதாப அஞ்சலியை பகிர்கின்றோம்

சாவகச்சேரி அம்பிகா பார்மசி உரிமையாளரும் எமது நண்பருமான **திரு.நமசிவாயம் சிவபாலன்** அவர்களின் அன்புத் துணைவியார்

**திருமதி சிவபாலன் நாமகள்** அவர்களின்

திடீர் மறைவினால் ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அவரின் பிரிவினால் வாடி நிற்கும் அனைத்து உறவுகளுக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**செவ்வந்தி**, நவீன சந்தை, சாவகச்சேரி.
**பைந்தமிழ்**, நவீன சந்தை, சாவகச்சேரி.
**செல்வம் கூல்பார்**, நவீன சந்தை, சாவகச்சேரி.
(19351)

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இராமலிங்கம் விநாயகமூர்த்தி

பூலோக மலர்வு 1938.08.20
பரலோக நுழைவு 2002.07.03

உவகை கொண்ட உள்ளந்து
வெண்மதியின் ஒளிவிட்டகன்று
ஓராண்டு சென்றதுவோ?
அணை மீறிப்பாயும் வெள்ளம் போல்
அழுகின்றோம் - தினமும்
ஆறுதலின் ஆண்டவரை வேண்டிநிற்கும்.

வடலித்தோட்டம், மானிப்பாய். (19347)
தகவல் : வி.லவன் *(மகன்)*

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 13 . 06 . 1953



இறப்பு 22 . 05 . 2003

### செல்லத்துரை மயில்வாகனம் (கிளி)

திதி - அபரபக்க ஸப்தமி (21.06.2003)

*"எங்கள் அன்புத் தெய்வமே பண்பின் இருப்பிடமே. பாசத்தின் உறைவிடமே. நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவுகள் நாம் உள்ளவரை மறையாது"*

இன்று (21.06.2003) சனிக்கிழமை நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும். தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கெற்பேலி, விடத்தற்பளை.
- குடும்பத்தினர்.
(சி-28604)

# 'சாமசூரி' விருது வழங்கும் விழா வவுனியாவுக்கு இடம்மாற்றம்

சமாதானத்துக்காக உழைத்தவர்களுக்கு 'சாமசூரி' விருது வழங்கும் நிகழ்வு இன்று வவுனியா நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. 'சாம சேவய' என்ற அமைப்பு இந்த விருதுகளை வழங்குகிறது.

நோர்வே மற்றும் ஜப்பான் தூதரகங்கள் பங்கேற்கும் இந்த விருது வழங்கும் நிகழ்வை யாழ்.பல்கலைக் கழகத்தில் நடத்த முன்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆனால், சமாதானம் ஏற்படாத நிலையில் சமாதானத்துக்காக விருது வழங்குவது ஏற்புடையதல்ல எனத் தெரிவித்து அந்த நிகழ்வுக்கு யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தது.

இந்நிலையிலேயே, அந்த வைபவ ஏற்பாட்டாளர்கள் வவுனியாவில் நடத்த முடிவுசெய்துள்ளனர்.

இந்த விழாவில் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் இன்றைய விழாவில் பங்குபற்றமாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ஓ-3)

## புலிகளின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியமானதாக இருக்காது என்றும் அவர் மேலும் சொன்னார்.

எமது நேரடி அவதானிப்புக்கள் மற்றும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டுதான் அறிக்கையை வெளியிடவேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

கண்காணிப்புக் குழுவின் அறிக்கை நேற்று வெளியாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

**SANTHOSH-PCS இற்கு ஆசிரியர்கள் தேவை**

மாவட்ட ரீதியாக கல்விச் சேவையில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு CHEMISTRY, PHYSICS, BIOLOGY, COM.MATHS ஆகிய பாடங்களைச் சிறப்பாகக் கற்பிக்கக் கூடியவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தகைமையுடையவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 23.06.2003 அன்று திங்கட்கிழமை சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

காலை 11-01மணிவரை
அருண் அச்சகம்,
சாவகச்சேரி.
T.P.-0777-758097

மாலை 2-4மணிவரை
திருமதி கலா பிரகதீஸ்வரன்.
No.28, பொற்பதி வீதி.
கொக்குவில்.

(C/28605) - நிர்வாகி

**நிறுவன ஊழியர்களுக்கு சமையலுக்கு ஆள் தேவை**

யாழ்.நகரில் பிரபல்யமான ஒரு நிறுவனத்தின் ஊழியர்களுக்கு சமைப்பதற்கு மேலைத்தேய சுதேச சமையல் செய்யத் தெரிந்த ஆள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
காரியாலய நேரத்தில் நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்,
உதயன் மனிதவள சேவை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/28480)

**த சாரிகா லேணர்ஸ்**



சகலவிதமான வாகனங்கள் செலுத்துவதற்கு சிறந்த முறையில் முழுப்பயிற்சி அளித்து சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள யாழ் நகரில் (இலங்கையில் பல பாகங்களிலும் சிறந்த சாரதிகளை உருவாக்கிய) த சாரிகா லேணர்ஸ் நிறுவனத்தினர் தமது யாழ்ப்பாண கிளையை 20.06.2003 வெள்ளிக்கிழமைமுதல் ஆரம்பித்திருக்கின்றார்கள் என்பதை யாழ் மக்களுக்கு அறியத் தருகின்றோம்.

*பஸ் நிலையம் முன்பாக*
*முனியப்பர் கோயில் வீதி,*
*இல.38, கந்தப்பசேகரம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தலைமைக் காரியாலயம்,
இல.108, புதிய பஸ்நிலையம்,
வவுனியா.
T.P.: 024 23515
(19318)

**இந்திய சாஸ்திரியார் வருகை**



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணியபூமிக்கு வருகைதந்துள்ளார்
பரம்பரை ஜோதிடர் புகழ்பெற்ற
**S.N.குமாரசாமி**

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை, கல்வித் தடையா? குழந்தைப் பாக்கியம், தீராத வியாதியா? மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

ஸ்ரான்லி லொட்ஜ்
இல.711, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 077-6080660
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்) (19288)

**YASO MOTORS**
**வாடிக்கையாளர்களின் கவனத்துக்கு!**

*அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!*
நாளை (22.06.2003) ஞாயிற்றுக்கிழமை எமது ஸ்தாபனத்துக்கு T.V.S. கம்பனி உறுப்பினர்கள் வருகைதரவுள்ளதால்

**T.V.S. SCOOTY PEP மோட்டார் சைக்கிள்**

வைத்திருக்கும் அனைவரும் காலை 9.00 மணிக்கு பழையநேரம் தவறாது சமுகம் அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

யசோ மோட்டோர்ஸ்,
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 222 2544 (சி-28603)

# சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்21

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையுண்ரியின் யாழ்.தெற்கு பிரதேச பிரிவு நடத்தும் உலக 'சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் தினம்' நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.தெற்கு பிரதேச சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (ஒ-4)

## பிரிவுபசார விழா பிற்போடப்பட்டது

யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற விருந்த முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட இறுதி வருட மாணவர்களுக்கிடையான பிரிவுபசார விழா பிற்போடப்பட்டுள்ளதாக வணிகத்துறை தலைவர் க.தேவராஜா அறிவித்துள்ளார்.

இந்தப் பிரிவுபசார விழா இடம்பெறும் திகதி பற்றிய விவரம் பினனர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட டி.எம். ஜயரத்ன (பொ.ஐ.மு.) அரச தரப்பினின் கோரிக்கையை ஆட்சேபித்ததோடு, பிரேதப் பெட்டியை எடுத்து வந்தது குறித்து விளக்கமளிக்கவும் தொடங்கினார்.

அப்பொழுது டி.எம். ஜயரத்ன உரையாற்றுவதை சபாநாயகர் தடுத்தார். ஆயினும், அவர் தொடர்ந்து உரையாற்றினார்.

உடனே சபாநாயகர் அவரைச் சபையிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டு, சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்தார்.

15 நிமிடங்களின் பின்னர் சபை மீண்டும் கூடியது. (ஒ)

## உள்ளூராட்சி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித்த வடக்கு-கிழக்கு மாகாணத்தில உள்ள 5அரச அதிபர்களும் சுதந்திரமான தேர்தலை நடத்தும் சூழ்நிலை இப்பொது இல்லை எனத்தெரிவித்ததாக அறியமுடிகிறது.

இதன் காரணமாகவே தேர்தலை பிற்போடுவதென தேர்தல ஆணையாளர் முடிவுசெய்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

முன்னைய நியமனப் பத்திரங்களை ரத்துச்செய்து புதிய நியமனப் பத்திரங்களைக் கோரி தேர்தலை நடத்த வசதியாக சட்டத்திருத்தம் செய்ய அரசு முயற்சி எடுத்திருந்ததும் -

நீதிமன்றத் தீர்ப்பால் அந்த முயற்சி பயன் அளிக்கவில்லை என்பதும் - குறிப்பிடத்தக்கவை. (ஒ-3-4)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை 7 மணிக்கே தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் -

ஆனால் ஜனாதிபதிக்குச் சம்பவம் நடைபெற்ற உடனேயே தகவல் கொடுக்கப்பட்டு விட்டதாகப் பின்னர் தான் அறிந்து கொண்டதாகவும் - திலக் மாரப்பன தெரிவித்தார்.

இது மிகவும் தவறான நடைமுறையாகும் இதுபோன்ற தவறுகளைக் கடற்படையினர் இனிமேல் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் மாரப்பன மேலும் தெரிவித்தார்.

எங்கு என்ன சம்பவம் நிகழ்ந்தாலும் அதனை உடனடியாகப் பாதுகாப்பு அமைச்சுக்கு தெரியப்படுத்த வேண்டியது முப்படையினரதும் கடமையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஒ-4)

# 'வெளிச்சம்' சஞ்சிகையின் 82 ஆவது இதழ் வெளியானது

யாழ்ப்பாணம்,ஜூன்21

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான 'வெளிச்சம்' சஞ்சிகையின் 82 ஆவது இதழ் வெளியாகியுள்ளது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கருத்துரையுடன்-

மாலிகா, அலையிசை, புதுவை இரத்தினதுரை, தபின், பத்தனையூர் வே.தினகரன், அநாமிகன், த.ஜெயசீலன், எஸ்.பி.பாலமுருகன், கோளாவில் இ.சுரேந்திரன், தருமவத்தனன், த.அகிலன், தமலச் செல்வன், மாணிக்கன் இயங்கோ ஆகியோரின் கவிதைகளும்-

செம்பியன் செல்வன், முத்து இராதாகிருஸ்ணன், விழிசிட்டி க.சிவராஜா, உடுவில் அரவிந்தன் ஆகியோரது சிறுகதைகளும்-

கலாநிதி புஷ்பரட்ணம், க.சட்டநாதன் ஆகியோரின் கட்டுரைகளும், தூயவனின் கள வெளிப்பாட்டுப் படைப்பும், நர்த்தனனுடனான நேர்காணலும், சோ.பத்மநாதனின மொழிபெயர்ப்புக் கட்டுரையும், யசீந்திராவின் 'மானுடத்தின் தமிழ்க்கூடல்-2003' இன் பதிவுகளும் வெளிப்பாடுகளும் ஆகியனவும் இடம்பெற்றுள்ளன.(எ-10)

## தமிழ்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்பந்தத்தை மீறும் செயல் அல்ல என்று அரசு தெரிவித்திருப்பது ஏற்றுக் கொள்ள முடியாதது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலமே இந்த இயக்க உறுப்பினர்கள் நிராயுதபாணிகளாக்கப் பட்டார்கள். தற்போதைய நிலையில் அவர்களுக்கு அரசு பாதுகாப்பு வழங்க வேண்டும். புலிகளுக்குப் பயந்துகொண்டிருக்கும் இந்த அரசால் அதைச் செய்யமுடியாது. ஆகவே, அவர்களைப் பாதுகாப்பதற்கு ஆயுதங்களை அவர்களுக்கு மீள வழங்க வேண்டும் - என்று கூறியுள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா செல்வரெத்தினம் (பத்தர்)

கொக்குவில், பூநாறி மரத்தடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்வரெத்தினப் பத்தர் நேற்று (20.06.2003) வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வாய்க்கால் கந்தையா - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கிருஷ்ணசாமிப் பத்தர், மங்களம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் ஞானகலாவதி, யோகேஸ்வரி, மகேஸ்வரன்(போதகர் ஸ்ரீபன்), கமலேஸ்வரி, நிர்மலகுமாரி(மேஷி), விக்னேஸ்வரி (ரெபேக்கா), ஸ்ரீமுருகன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்ற செல்லத்துரைப் பத்தர், சுந்தராம்பாள்(றோசிற்றா), ஜெயராமன்(வயலின் வித்துவான், யாழ்.பொது நூலகம்), அமுத ரஞ்சனா ஆகியோரின் அன்பு மாமனாரும் நவநீதராஜா மாலா(லண்டன்), ரவிச்சந்திரன சிந்து(ஜோய் நகைமாடம்), ராஜினி, ரஜனி, ரவிராஜன், ரவீந்திரன், சாரங்கன், சைந்தவி, சாருகேசி, நோவா பிரதீப, அக்ஷாளா, கஜானா, நாகூம், நோயல், ஜனனி, ஜனப்பிரியன், நதுஜனன் ஆகியோரின் அன்புப் பேரனும் நளாஜினி, தாட்சாயினி(லண்டன்), நிஷான், நிதுஷன், றொக்ஷானா ஆகியோரின் அன்புப் பூட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(22.06.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*671/2, கே.கே.எஸ். வீதி,*
*பூநாறி மரம் லேன்,*
*யாழ்ப்பாணம்.*
(19354)

தகவல்:
போதகர் ஸ்ரீபன்(மகன்),
ஸ்ரீமுருகன(மகன், மோட்டார் சைக்கிள் மெக்கானிக்-ஸ்ரீ)

## ஆசீர்வாதம் மரியநாயகம்

கரம்பொன்னைப் பிறப்பிடமாகவும் உடையார்கட்டை வசிப்பிடமாகவும் அச்சக ஒழுங்கை, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் மரியநாயகம் நேற்று (20.06.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - விக்ரோறியா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை-சூசானத்தின் அன்பு மருமகனும் மேரி மாகிறேற்றின் அன்புக் கணவரும் சுறேஜினி(ஆசிரியை, புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்துறை), சுறேஸ், றுபேஜினி(City Pharma), றுபேஸ் (K.T.P.M., வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவராஜாவின்(ஆசிரியர், புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) மாமனாரும் ஜோன் பீற்றின் பெரிய மாமனாரும் அருள் ஜீவிதனின் பேரனும் காலஞ்சென்ற யோசவ் மற்றும் கெலன், ராசாத்தி, பாக்கியம், அருட்சகோதரி கிரிஸ்ரா(திருச்சிலுவை கன்னியர் சபை), கிறேசியன ஆகியோரின் சகோதரனும் மரியநாயகம், காலஞ் சென்ற றெஜீஸ், யூலியற்ரதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை(22.06.2003) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக சில்லாலை புனித கதிரைமாதா ஆலய சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5/3, அச்சக ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
(19353)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்,
மருமகன்.

## திருமதி நாமகள் சிவபாலன்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் சரசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாமகள் சிவபாலன் நேற்று (20.06.2003) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ந.சிவபாலனின் அன்பு மனைவியும் சாம்பவி, சங்கவி ஆகியோரின் தாயாரும் அருணாசலம்(ஓய்வுபெற்ற கிராமசேவையாளர்), சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் மகளும் திருமதிகள் கௌரி சண்முகலிங்கம்(லண்டன்), யமுனா சிவகுமாரன்(ஜேர்மனி), கங்கா நந்தகுமாரன்(நோர்வே), குகன் (ஆசிரியர், யா/சாவகச்சேரி இந்துக கல்லூரி), விசயன்(லண்டன்) ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற ச.நமசிவாயம், திருமதி ந.புனிதவதி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.06.2003) சனிக்கிழமை பி.ப 3.00மணிக்கு சரசாலையில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக ஆலடி (சரசாலை) இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*
(19352)

**தகவல்:**
ந.சிவபாலன் (கணவர்),
அம்பிகா மருந்தகம்,
சாவகச்சேரி.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361அம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.06.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.